# தமிழ்நூற் பதிப்பு பணியில் உ.வே.சா.

## பாடவிமர்சனவியல் நோக்கு

கார்த்திகேசு சிவத்தம்பி

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நூற் பதிப்புப் பணியில் உ.வே.சா.

## பாடவிமர்சனவியல் நோக்கு

**கார்த்திகேசு சிவத்தம்பி**
தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**குமரன் புத்தக இல்லம்**
**கொழும்பு – சென்னை**
**2007**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டு எண் : 288

தமிழ்நூற் பதிப்புப் பணியில் உ.வே.சா. பாடவிமர்சனவியல் நோக்கு
– பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி எழுதியது

பதிப்புரிமை © : திருமதி ரூபவதி சிவத்தம்பிக்கு

முதற் பதிப்பு : 2007

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பெற்றது
–361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12, தொ.பே. 2421388, மி. அஞ்சல் : kumbh@sltnet.lk
– 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை – 600 026

**Thamilnut Pathippup Paniyil U.V.C. : Padavimarsanaviyal Nokku**
U.V.Caminathiyar -his contribution to the Publication of old Tamil texts a study bassed on textual criticism
by: Prof. Karithigesu Sivathamby

Copy Right © Mrs. Rubawathy Sivathamby

First edition : 2007

*Published by* **Kumaran Book House**
- 361,1/2 Dam Street, Colombo -12,Tel. - 2421388, E.mail : kumbh@sltnet.lk
- 3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

**ISBN 978 - 955 - 659 - 104 - 4**

All rights reserved. No part of this book may be reproduced, translated, stored in a retrieval system, or transmitted in any form or by means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior written permission from the Author or the Publisher.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

நண்பர்கள் நாங்கள் 'டாக்குத்தர்' என வாய்நிறைய அழைத்த
வே.பாலசுப்பிரமணியத்தின் நினைவுக்கு .......
கோபாமில்ஸ் எனும் நிறுவனத்தின் சொந்தக்காரனாய்
கொழும்பின் மிகப்பெரிய தனவந்தர்களுள் ஒருவனாய்
அதேவேளையில் தன் இளமைக்கால நண்பர்களுடன்
பாடசாலைக்கால வாஞ்சை குறையாது
அன்பினில் தோயவைத்தவன்
அவன் நினைவுக்கு

– **சிவத்தம்பி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

'காலச்சுவடு' சஞ்சிகையில் உ. வே. சா. பற்றி வந்த கட்டுரைத் தொடரில் எனது கட்டுரையொன்றும் இடம்பெறல் வேண்டு மென்று அச்சஞ்சிகையின் ஆசிரியர் கண்ணண் மிக்க அன்புடன் வேண்டியிருந்தார். அக்கட்டுரைக்கான சிந்திப்பின்பொழுது உ.வே.சா., சி.வை.தா. ஆகிய இருவரையும் 'textual criticism' என அழைக்கப்படும் பாடவிமர்சனவியல்துறையின் பின்புலத்திலே நோக்க வேண்டும் என்பதனவசியத்தையும் அத்துடன், பண்டைய தமிழிலக்கியப் பாடப்பதிப்பினை உ.வே.சா., சி.வை.தா. வுடன் மாத்திரமே நிறுத்திவிடாது இயன்ற அளவுக்கேனும் வையாபுரிப் பிள்ளை, மு.அருணாசலம் போன்றோர்வரை வரவேண்டிய அவசி யத்தையும் உணர்ந்தேன். இதனால் இக்கட்டுரை ஒரு நிலையில் அளவுக்கு மிஞ்சியதாகவும், இன்னொரு நிலையில் போதாமைகள் பல நிறைந்த ஒன்றாகவும் அமைந்தமை தவிர்க்கப்பட முடியாத தாயிற்று. இந்த முரண்நிலைக்குள் அகப்பட்டுப்போன நிலைமை யிலுங்கூட முதற் படிவத்தினைக் காலச்சுவடு கட்டுரையின் அளவு, நீளங்காரணமாக வெளியிடமுடியாமற் போயிற்று. அந்நிலையிலே தான் இக்கட்டுரையை என்ன செய்வதென்ற எண்ணம் ஏற்பட்டது. அப்பொழுது ஒருநாள் நண்பர் பொ. வேல்சாமி இக்கட்டுரை இடம்பெறும் வகையில் காலச்சுவட்டில் உ.வே.சா. பற்றி வெளி வந்த கட்டுரைகளுடன் சேர்த்துப் பிரசுரிப்பதற்கான ஓர் எண்ணமி ருப்பதாகக் கூறினார். பின்னர் ஒருநாள் திடீரெனத் தொலைபேசி வழியாகத் தொடர்புகொண்டு இந்நூற் தொகுப்பினை பெருமாள் முருகன் செய்து கொண்டிருப்பதாகக் கூறினார். பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உ.வே.சா., என்ற பேருருவம்' என்ற தலைப்பில் அந்நூல் வெளி வந்தது. இப்பொழுது இக்கட்டுரையினை ஒரு தனி நூலாக வெளியிடவேண்டியுள்ள ஒரு புலமை நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இக்கட்டுரையின் பிரதான தளமாக அமைவது பாடவிமர்சனவியல் நோக்காகும்.

இக்கட்டுரை உருவாக்கத்தின்பொழுது ஆலோசனைகளும் ஊக்கமும் தந்து உதவியோர் பலர். கலாநிதி செ.யோகராசா, கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் இப்பொருள்பற்றி விவாதித்து உதவினர். இவ்விடயத்தில் தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண ஆயர் கலாநிதி எஸ்.செபநேசன் 'சி.வை.தா.' பற்றி எடுத்துக் கூறினார்.

'காலச்சுவடு' கண்ணன் மிகுந்த பொறுமையுடன் ஊக்கு வித்தார். முதலிலே இக்கட்டுரை எழுதியபொழுது சிவகுமாரன் உதவினார். கட்டுரையைப் படியெடுத்து எழுதியவர் செல்வி ச.சுஜாந்தினி. இக்கட்டுரை முழுமைபெற்ற நிலையில் அதனை மீளவாசித்து உதவியவர் செல்வி மாகறிற்றா வேதநாயகம். இறுதி மெய்ப்புப் பார்த்தவர் க.கணேஸ். இவர்கள் யாவருக்கும் என் நன்றி உரித்து.

உ.வே.சா., சி.வை.தா. பற்றிய எனது கட்டுரையினை ஒரு தனிச்சிறுநூலாக வெளியிடல் வேண்டுமென வற்புறுத்திய கணேசலிங்கம் குமரனுக்கு எனது நன்றிகள் உரித்து. அக்கட்டுரை பற்றிய தங்கள் குறிப்புரைகளை பேராசிரியர்கள் வீ.அரசு, எம்.ஏ.நுஃமான் ஆகியோர் எடுத்துக்கூறினர். அவர்களுக்கும் எனது நன்றி.

**கொழும்பு** **கார்த்திகேசு சிவத்தம்பி**
**30.12.2007**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


*முன்னுரை* *vii*

1. தமிழிற் 'பாடம்', 'பாடவிமர்சனவியல்': ஓர் அறிமுகக் குறிப்பு *1*

2. உ.வே.சா.வின் பதிப்புப்பணி : பாடவிமர்சனவியல் நோக்கு *16*

உசாத்துணை *58*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழிற் 'பாடம்', 'பாடவிமர்சனவியல்'
## ஓர் அறிமுகக் குறிப்பு

I

இந்த நூற் கட்டுரை அமைந்துள்ள முறைமையில் பாட ஆய்வியலின் முக்கியத்துவம் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர அது பற்றி ஒரு வரன்முறையான புலமையறிமுகம் தரப்படவில்லை. அது மாத்திரமல்லாமல் பாடஆய்வியல் நவீன காலத்துக்கு முந்தைய, நவீன காலத்துத் தமிழிலக்கியங்களை நோக்க வேண்டிய முறைமை பற்றியும் விளக்கமாக எதனையும் கூறவில்லை. அப்படிச் செய்வதானால் இக்கட்டுரையை மீள அமைத்துத் தமிழிற் பாடஆய்வியல் தொழிற்பட்டுள்ள முறைமையினை எடுத்துக் காட்டும் வகையில் பிரித்தும் விரித்தும் எழுதும் தேவை ஏற்படும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அதைச் செய்யக்கூடிய வகையில் இன்று நான் இல்லை. இக்குறைபாட்டை நீக்குவதற்கு இம் முன்னுரையை ஓரளவேனும் பயன்படுத்தலாம் என்று கருது கின்றேன். இம்முன்னுரைக் குறிப்பில் தமிழிலக்கிய வரலாற்றில் பாட இனங்காணுகையும், பாட நிர்ணயிப்பும் எத்துணை முக்கியம் பெறுகின்றன என்பதைப் பற்றிச் சிறிது கூற விரும்புகிறேன். 'தமிழில் இலக்கிய வரலாறு' என்ற எனது நூலில் நான் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளேனெனினும் இங்கு சற்று முனைப்பாகச் சில வற்றைக் கூறலாமென்று கருதுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II

ஆங்கிலத்தில் text எனப்படும் சொல்லுக்கான மாற்றீடாகப் பாடம் என்ற சொல் இங்கு பயன்படுத்தப்படுகின்றது. 'பாடம்' என்பதனை Text என்பதற்கான கலைச் சொல்லாகக் கொள்ளல் வேண்டும். text என்பதற்கான பிரதான கருத்தினை ஒக்ஸ்ஃபோர்ட் அடக்க அகராதி பின்வருமாறு கூறும்: a writing or printed work regarded in terms of content rather than form. அதாவது உருவநிலையில் அல்லது உள்ளடக்க நிலையில் வைத்துப் பார்க்கப்படுவதான, கையால் எழுதப்பெற்ற அல்லது அச்சடிக்கப்பெற்ற ஓர் ஆக்கம். இலத்தீன் மூலத்திலிருந்து வரும் இச்சொல் 'பார்க்கப் படுவதாகவுள்ளது' என்ற மூலக்கருத்தின் பரிமாணப் படிமாற்றமாக இன்றைய இக்கருத்தினைப் பெற்றுள்ளதெனலாம். மேற்கூறிய கருத்தே பிரதானமானதெனினும் 'டெக்ஸ்ட்' எனும் இச்சொல்லுக்கு வேறு கருத்துகளும் உள்ளன. அவற்றுள் 'படிக்கப்படுவதற்கான' பகுதி என்ற கருத்தும் உண்டு. மேல்நாட்டுப் பாரம்பரியத்தில் எழுத்து/அச்சு ஆக்கத்தின் அமைவுப்பாடம் என்று கொள்ளலாம்.

'டெக்ஸ்ட்' என்பதனை தமிழில் எவ்வாறு எடுத்துக் கூறலாம் என்பது சிக்கல் நிறைந்த ஒரு விடயமாகும். சென்னைப் பல்கலைக் கழக ஆங்கில அகராதி முதுபாடம், மூலபாடம் என்பனவற்றையும் குறிக்கின்றது. முது பாடம் என்பது old text என்பதனையும், மூல பாடம் என்பது original text என்பதனையும் குறிக்கும். ஆங்கில அகராதியில் கண்டதற்கமைய நோக்கும்பொழுது பாடத்தை எழுதப்பெற்றதன் அல்லது அச்சடிக்கப்பெற்றதன் உள்ளடக்க அமைவுக்கூறாகவே கொள்ளல் வேண்டும். மேல்நாட்டில் எழுத்து வழக்கினடியாக (பார்க்கப்படுவது) வளர்த்தெடுக்கப்பட்ட இச் சொல் தமிழில் ஓர் ஆக்கப்பணியின் எந்த அம்சத்தை முதன்மைப் படுத்த வேண்டுமென்பது நோக்கல் வேண்டும். கேள்வி, கல்வியின் பிரதான கூறாகக் கொள்ளப்படும். இந்தியப் பாட மரபில் ஒத்திசை யோசையே தளநிலைக்கூறு ஆகும். எனவேதான் 'பா' (பாட்டு) (சமஸ்கிருதத்தில் உச்சாடனத்துக்குரிய கூறாக ஸ்லோகம் முக்கியம் பெறுவதை நோக்குக) பாடப்படும் உள்ளடக்கம் பாடமாகும். எனவேதான் 'பா' முக்கியமாகின்றது (பாடல் = வினைப்பெயர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாசிரியர்கள் 'பா' என்பதற்கு இழைக்கப்பெறுதல் (இழைக் கப்பெற்றது) என்ற ஒரு நுண்ணிய பொருளையும் கொள்வர். அக்கருத்துவழி நோக்கும்பொழுது, ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கி வைப்பதைப் பாடம் செய்தல் எனக் குறிக்கப்படும் விவசாய வழக்கு மூலம் அறியலாம் (உதாரணம் : புகையிலைப் பாடம்). இவ்வாறு நோக்கும்பொழுது ஆங்கில அகராதி கூறும் கருத்துக்கான தமிழ் வடிவம் பாடம் என்பதேயாகும்.

பாடம் எனும் சொல் இலக்கிய ஆய்வின்பொழுது குறிப் பாகச் செவ்விதாக்கம் (edit) செய்யும்பொழுது பெரிதும் பயன் படுத்தப்படும் ஒரு சொல்லாகும். ஒரு பாடலுக்குப் பாட வேறுபாடு வரும்பொழுது "என்பதும் பாடம்" என்று கூறுதல் மரபு. பாட பேதம் என்ற சொல்லின் பெருவழக்கையும் அவதானித்தல் வேண்டும். பாடம் என்ற சொல்லுக்கு விதிக்கப்பெற்ற பாடற்பகுதி; கற்பிக்கப்படுவதற்கான பாடக் கூறு (lesson) என்பவையும் கருத் தாகும். பாடம் என்ற சொல்லுக்கு இணையான வேறு பல கருத்துகளும் இருப்பதால் textக்கு பாடம் எனும் சொல்லை தவிர்த்து 'பிரதி' என்பதனை அதற்கான தமிழ் வடிவமாகக் கொள்ளக்கூடாதா என்ற வினாவும் எழுவது இயல்பே. நவீன தமிழிலக்கிய வழக்கில் 'பிரதிபேத ஆராய்ச்சி' என்ற தொடரே பயன்படுத்தப்படுவதைக் காணுகின்றோம். இங்கு பிரதி என்பது அச்சின் வழியாக வந்த ஒரு தொடராகும். அச்சு வழக்குக்கு முந்தைய நூல்களைப் பொறுத்த வரையில், பாடபேதம் என்று கூறுவதே மரபு. எனவேதான் text என்பதற்குப் பாடம் எனும் சொல்லைப் பயன்படுத்துவது பொருத்த மானதெனக் கருதுகின்றேன். உண்மையில் இதனைப் புத்தாக்கம் என்று கொள்ளாமல் 'மீள் பயன்பாடு' என்றே சொல்ல வேண்டும்.

## III

அடுத்து முக்கியமாவது textual criticism எனப்படும் பாட விமர்சனம் (ஆய்வியல்) எனுந்துறையின் விடயப்பொருள் யாது என்பதாகும். சுருங்கக் கூறின் பாட அமைதி எனும் விடயமே இங்கு பிரதானப்பட்டு நிற்கும். அப்பாட அமைவினுள் இப்பொழுதுள்ள பாடம், அது பெறப்பட்டுள்ளமுறைமை, கையளிப்பு நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகள் ஆதியன முக்கிய இடம்பெறும். பாடக்கையளிப்பில் 'எழுது பாங்கு' (mode of writing) முக்கியமாகும். தமிழைப் பொறுத்தவரையில் தமிழிலக்கியப் பாடவிமர்சனத்தில் அச்சுப் பதிவுக்கு முந்தைய காலம், அச்சுப்பதிவுக் காலம் என இரண்டு பிரதான பிரிவுகளைக் கொள்ளலாம். அச்சுப் பதிவுக்கு முந்தைய நிலையில் வாய்வழி மரபு (செவிவழி மரபு) முக்கிய இடம்பெறும். மரபுவழித் தமிழ் கற்பித்தலிலே பாடஞ் சொல்லுதல் என்றே கூறுவர். இலக்கியப் பாடவரன்முறையைச் சோதிடம், மருத்துவம் போன்ற துறைகளிலிடம்பெறும் மரபுகளைப் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். அச்சுப்பதிப்பு முறைமை பற்றிப் பேசும்பொழுது தமிழகத்திலும் சரி இலங்கையிலும் சரி இன்னும் தான் பிரபல எழுத்தாளர்கள், அறிஞர்கள், தமிழ்ப் பத்திரிகையாளர்களது எழுத் துகள் யாவற்றையும் ஒருங்குசேர ஓரிடத்திலே பேணி வைக்கும் முறைமை நன்கு தொடங்கவில்லையெனலாம். பல்கலைக்கழக நூலகங்களிலோ இவ்வழக்கு இன்னும் வரவே இல்லை. பாரதியார் அவருக்குப் பின் வந்த பாரதிதாசன் பற்றிப் பாடஆய்வியல்நிலை ஆராய்ச்சிகள் சில மேற்கொள்ளப்பட்டுள்ளனவென்றாலும், உரையிலக்கியத்தைப் பொறுத்த வரையில், பாடவிமர்சனம் தொடக்க நிலையிற்கூட இல்லையெனலாம்.

பாடவிமர்சனம் பற்றிப் பேசும் இக்கட்டத்தில் அச்சுக்கு முந்திய கால நூல்களை அவற்றின் பாடங்களை ஆராய்ந்து வெளியிட்டோரைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது 'பதிப்பாசிரியர்' என்று குறிப்பிடும் மரபே பெருவழக்காக உள்ளது. இவ்விடயம் பற்றிக் கட்டுரையினுள்ளும் சிறிது பேசப்பட்டுள்ளது. ஆயினும் இங்கும் அதுபற்றிக் குறிப்பிடுதல் மிக அவசியம். அச்சுக்கு முந்தைய நூல்களைப் பரிசோதித்து அச்சில் வெளிக்கொணர்ப வரைப் பதிப்பாசிரியர் என்று கூறும் மரபே உண்டு. ஆங்கிலத்தில் "edited by......" என வருவதைத் தமிழில் இன்னாராற் (பதிப்பிக்கப் பெற்றது) என்று கூறுவதே மரபாகவுள்ளது. இங்கு edit என்ப தற்கான தமிழ் மொழிபெயர்ப்பாக 'பதிப்பு' என்ற சொல் வருகின்றது. பத்திரிகைகள், சஞ்சிகைகள் தொடர்பாகவும் editor என்பவரை ஆசிரியர் என்றே கூறுவர். எனவே பதிப்பாசிரியர், ஆசிரியர் எனும் பதங்களே editor என்பதற்குப் பயன்படுத்தப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. அச்சுக்கு முந்தைய நூல்களின் பாடத்தைப் பரிசோதித்து அதனை அச்சில் வெளிக்கொணரும் பணியை 'பதிப்பாசிரியர் பணி' என்று கூறுவது வழக்காகிவிட்டது. அச்சுப்பதிவு பிரதானப் படுவதால் இச்சொற் பயன்பாடு வந்ததெனலாம் (பத்திரிகைகள், சஞ்சிகைகளை edit செய்பவரைத் தனியே ஆசிரியர் என்றே கூறுவர். அத்துறையில் பதிப்பு என்பது 'publishing' என்பதனைக் குறிக்கும்).

இங்கு அச்சாணியான வினா யாதெனில் edit செய்வதென் பது யாது என்பதாகும். ஒக்ஸ்ஃபோர்ட் அடக்கக் கையகராதி பின்வருமாறு கூறும் : 1.prepare (written material) for publication by correcting, condensing or otherwise modifying it; 2. a change or correction made as a result of editing. அதாவது வெளியிடுவதற்கான ஒன்றைச் சுருக்கியும், விளக்கியும் வெளியிடுவதற்கு உரிய முறையில் தயாரித்தல் என்பதே பொருளாகும். இன்னொரு வகையில் கூறினால் ஆங்கிலத்தில் editing எனக் கூறப்படும் செயற்பாடு ஏதோஒருவகையில் செவ்விதாக்கம் செய்வதையே குறிக்கும். நிச்சயமாக அது பதிப்பு ஆகாது (திரைப்படத்துறையில் படத்தொகுப்பு என்பர்; உண்மையில் இது செவ்விதாக்கத்தின் ஒருகூறே). நூற் செவ்விதாக்கமெனினும் சரி, பத்திரிகையெனினும் சரி செவ்விதாக்கம் என்பது பொருத்தமுடைய சொல்லாகும். வழக்கு வலிமை காரணமாக ஆசிரியர் என்ற சொல்லைத் தொடர்ந்து பயன்படுத்தினாலும் நூல்களைப் பரிசோதித்துப் பாடச்செம்மையுடன் தயாரித்தலைச் செவ்விதாக்குதல் என்ற பதங்கொண்டு குறிப்பிடுதலே அத்தொழிற்பாட்டைப் புரிந்துகொள் வதற்கான வழிமுறையாகும். இதனை இங்கு கூறுவதற்குக் காரணம், குறிப்பாக ஒரு பாடத்தினை வெளியிடும்பொழுது அதனை எம்முறையில் அமைத்தல் வேண்டும் என்பது பற்றிய தெளிவு இருத்தல் வேண்டும் என்பதற்காகவேயாகும். இன்னொரு வகையிற் சொன்னால் பதிப்பாசிரியர் பணி என்பது செவ்விதாக்கப் பணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV

'பாடச் செவ்விதாக்கம்' என்பது அப்பாடத்தினை ஆக்கிய வரல்லாத ஒருவர் அதனை ஏதோஒருவகையிற் பிரசுரிக்க முயலும் பொழுது மேற்கொள்ளும் பாட ஒழுங்கமைப்புச் செயற்பாடாகும். அச்சு நிலையில் ஆசிரியர் ஒருவர் தான் எழுதியதைச் செவ் விதாக்கம் செய்யும் முயற்சியிற் கையெழுத்துப் பிரதியைத் திருத்தல், மெய்ப்புப் (proff) பார்த்தல் ஆகிய நடைமுறைகள் இடம்பெறும். ஆசிரியர்கள் தங்கள் எழுத்துப் படிவங்களை மேற்கூறிய இரண்டு நிலைகளிலும் திருத்துவதும், சிலவற்றைப் புகுத்துவதும் மரபு. நவீன காலத்துக்கு முற்பட்ட தமிழிலக்கியத் தினைப் பொறுத்தவரையில் பிரதான எழுத்தாவண முறைமையாக அமைந்தது ஏடு எனப்படும் எழுத்துப்படிவக் களமாகும். தமிழில் நூல்கள் ஏடுகளிலே எழுதப் பெற்றிருந்தன எனலாம். எழுத்து நிலைக்கு முன்னர் இலக்கியப் பாடங்கள் வாய்மொழி நிலைப் பட்டனவாகவே இருந்திருத்தல் வேண்டும். இவ்விடயத்தில் ஏடு எனும் சொல்லின் கருத்தும், வழக்கும் பற்றி அறிதல் மிக்க பயனைத் தரும். ஏடு என்பதற்கு 'வரலாற்று முறைத் தமிழ் இலக்கியப் பேரகராதி' இதழ் போன்ற புல்லின் உறுப்பு என்ற கருத்தைத் தருகின்றது. ஏடு என்பது புல்லினோடு வரும் சொல்லெனத் தொல் காப்பியம் கூறுவதை மேற்கோள் காட்டியுள்ளது.

பொருநராற்றுப்படையில் தாமரை இதழ் பற்றிக் குறிக்க ஏடு எனும் சொல் பயன்படுத்தப்படுவதைக் காணலாம் (எரி அகைந்தன்ன ஏடு இல் தாமரை, சுரி இரும் பித்தை பொலியச் சூட்டி: 159 - 160). ஆயினும் செய்தி எழுதப்பட்ட ஓலை எனும் கருத்தில் 'ஏடு' எனும் சொல் முதலில் வருவது சிலப்பதிகாரத்திலே என்பர் (ஏடு அகம் விரித்து ஆங்கு எய்தியது உணர்வோன்). சிலப்பதி காரத்திலே இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ள முறையை நோக்கும் பொழுது எழுதப்பட்டிருந்த இந்தச் செய்தி ஏதோ ஒருவகையில் நன்கு மூடி அமைக்கப்பட்டிருந்தது என்பது புலனாகின்றது (ஏடு அகம் விரித்து). சிலப்பதிகார காலத்தில் இத்தகைய தகவல், செய்தி அனுப்பும் முறைமை வலுவான வழக்காகவிருந்தது போலத் தெரிகின்றது. அக்கட்டத்திலேயே பனையோலையிலே எழுதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம் வந்துவிட்டதோ தெரியவில்லை. இவ்விடயத்திலே சுவடி எனும் சொல் முக்கியமானதாகும். 'சுவடி' என்பது ஏட்டில் எழுதப் பெற்ற நூலைக் குறிக்கும் என்பர். சுவடி எனும் சொல்லின் முதற் பிரயோகம் பெருங்கதையில் வருகின்றது (8 அல்லது 9ம் நூற்றாண்டு). அதற்கான மேற்கோள் நூற்பாடம் எவ்வாறு அமைந்த தென்பதனை நன்கு விளக்குகின்றது ('பாட்டுப் புறம் எழுதிய கட்டமைச் சுவடி பற்றிய கையினார்'). 'ஓலையின் புறத்திலே பாட்டு எழுதியிருந்ததென்பதனையும் அந்தச் சுவடி கட்டமைச் சுவடியாக அதாவது இறுக்கமான கட்டமைப்பைக் கொண்ட ஒன்றாக இருந்தது என்பதனையும் அறியக்கூடியதாக உள்ளது'.

எழுதப்பெறும் ஏடு என்பது தமிழ் நாட்டு நிலையிற் பாரம் பரியமாகப் பனையோலையாலான ஏட்டினையே குறிக்கும். பனையோலையை எடுத்து அதனை ஈர்க்குடன் கிழித்தெடுத்து பின்னர் அவற்றைக் காயவைப்பர். அவ்வாறு காய வைக்கும்பொழுது ஒரு குறிப்பிட்ட மட்டத்தில் அவற்றை எழுது வதற்கான ஏடளவுக்கேற்ப வெட்டியெடுத்துக்கொள்வர். அந்நிலை யிலே கிழித்தெடுக்கப்பட்ட ஓலைக் கீற்றுகளை நன்கு பதனிட்டுக் காயவைப்பர். ஏட்டுக்கான எழுத்தோலையின் நீளம் அகலம் சுமார் 12,18 அங்குல அளவினதாக இருக்கும். இந்த அளவு இடத்திற்கேற்ப மாறுபடும். தனியொரு ஏட்டினை, அதாவது ஒற்றையோலை ஏட்டில் எழுதும்பொழுது அந்த ஓலைக்குரிய ஈர்க்குடனேயே வைத்திருப்பர். சாதகக் குறிப்புகள் அதாவது பிறந்த குழந்தையொன்று பற்றிய சோதிடக் குறிப்புகள் இவ்வாறு தனியோலைகளிலே எழுதப் படும் மரபு இன்றுமுண்டு. ஆயினும் ஓலைகள் பலவற்றினைக் கொண்ட ஏடுகளாக இருப்பின் அத்தகைய ஓலைகள் மேலும் கீழும் அளவுக்கு இயைந்தபடி செய்த மரத்தினாலான மட்டைகளைக் கொண்டதாக இருக்கும். அத்தகைய வேளைகளில் ஓலை களினூடே ஒரு நூலினை (கயிறு) ஓட்டி மட்டையினூடாக எடுத்துத் தொகுத்துக் கட்டுவர். ஒன்றுக்கு மேற்பட்ட ஏடுகளைச் சேர்த்து ஒன்றாக வைப்பதற்கு ஓலைகளினூடே ஓடும் நூல் முக்கியமான தாகும். இதன் வழியாகவே நூல் எனும் சொல் book இனைக் குறிக்க வந்திருத்தல் வேண்டும். புஸ்தகம் என்ற சொல்லினது தோற்றமும் இதுவாகவே இருந்திருத்தல் வேண்டும். சிங்களத்தில் இவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்படுவனவற்றை 'பொத' என்பர். அதாவது, பொத்தகமாக உள்ள (பத்திரம்) ஓலை. புஸ்தக எனும் சொல் பாகத (பாளி) மொழிவழியாக பொத்தகம் என்றே தமிழில் நிற்கும்.

வாய்மொழி நிலையிற் பேணப்பட வேண்டியனவற்றை மனனம் செய்து கொள்வர். அவ்வாறு மனனஞ் செய்வதையும் பாடம் செய்தல் என்றே கூறுவர். இத்தொழிற்பாட்டை மனப்பாடம் செய்தல் என்றும் வழங்குவர்.

வாய்வழியாகக் கையளிக்கப்பெற்றவை எழுத்து வழக்கு வரத்தொடங்கும் நிலையில் எழுத்துவடிவமாகப் பொறிக்கப்படும். இக்கட்டத்தில் எழுத்து எனும் சொல்லின் மூலக்கருத்தினை அறிதல் பயன்தரும். எழுது எனும் சொல்லை ஓவிய வரைவுக்குப் பயன்படுத்தப்பெற்ற வினையடியாகக் கொள்ளவேண்டும். 'எழுது' (''எழுது எழில் உன் கண் பார்வை''- நற்:177:9). தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை நோக்கும்பொழுது எழுத்து என்பது உச்சரிக் கப்படும் எழுத்தலகையும் அது எழுதப்படுவதையும் குறித்து நிற்பதைக் காணலாம். ஒரு நூல் எழுத்து வடிவிலே பதியப் படும்பொழுது அப்பண்பாட்டில் எழுத்து மிகவும் சரளமாக ஏற்கெனவே பயன்பட்டிருத்தல் வேண்டும். ஆரம்பநிலை கல் வெட்டுநிலையில் காணப்படும் எழுத்து வழக்கு நூற் பண்பாட்டுக் குப் போதுமானதாக இருக்காது. இந்த வரலாற்று நிலையின் அடிப்படையில் நோக்கும்பொழுது பாட்டும் தொகையும் எப் பொழுது எழுத்து வடிவுக்குக் கொண்டு வரப்பட்டன என்பது சுவாரஸ்யமான, முக்கியமான வினாவாகும்.

ஏட்டெழுத்து நிலைக்கு வரும்பொழுது எழுத்தில் தரநிலை (standardisation) ஒன்று ஏற்பட்டுவிடும் என்பதுண்மையெனினும், அதனுள்ளேயும் எழுத்தில் வடிவ உருமாற்ற வளர்ச்சிகள் ஏற் படுவது தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகும். யாழ்ப்பாணத்தின் 'தோம்பு' எனும் காணிநிலங்களுக்கான மூல உறுதிப் பத்திரங் களைப் பார்த்த பரிச்சயத்தை அடிப்படையாகக் கொண்டு கூறுவ தானால், சில வேளைகளில் ஏடுகளில் எழுத்துருவ வேறுபாடுகள் குறிப்பாக சுருக்கக்குறியீடுகள், எழுத்துக்களைச் சேர்த்தெழுதுதல், ஆதியன காணப்பட்டுள்ளன என்று கூறலாம். உ.வே.சா., சி.வை.தா. ஆகியோர் ஏடுகளைப் பயன்படுத்தியுள்ள முறைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய குறிப்புகளையும் அவர்கள் ஏடுகள் சிலவற்றை அப்பியாசக் கொப்பிகளில் எழுதுவித்து வைத்திருந்தனர் எனுங் குறிப்புகளையும் நோக்கும்பொழுது, அவ்வந் நூல்களுக்கான ஏடுகளை இவர் களுக்கு வாசித்து உதவிய மரபு வழித் தமிழறிஞர்கள் இவர்களுக்கு உதவியுள்ளனர் என்று கொள்வது உண்மைக்குப் புறம்பானதாக இருக்க முடியாது. பாரம்பரிய தமிழ் அறிஞர்களைப் பொறுத்த வரையில், ஏடுகளைச் சரளமாக வாசிக்கும் அறிஞர்கள் பலர் இருந்து வந்துள்ளனர் என்பதும், அவ்வாறு ஏடுகளை வாசிக்கும் வழக்கமானது இன்றுவரை முற்றிலும் அழிந்துவிடவில்லை யென்பதும் முக்கியமான வரலாற்றுண்மைகளாகும். மருத்துவ ஏடுகளை (வாகடங்களை) வாசிக்கும் அறிவுடைய மருத்துவர்கள் பலரை இன்றும் நாம் காணலாம். சோதிடத்துறைக்கும் இக்கூற்றுப் பொருந்தும். கிழக்கிலங்கையில் மட்டக்களப்புப் பகுதியில் இம் மரபு இன்றும் பெரிதும் போற்றப்பட்டு வருகின்றது. உண்மையில் மரபு வழி அறிவினைப் பொறுத்தவரையில் தமிழகத்திலும் சரி இலங்கையிலும் சரி ஏட்டுப் பரிச்சயம் இன்றுவரை உள்ளதெனலாம்.

இன்றுங்கூடப் பிறக்கும் குழந்தைகளின் சாதகக் குறிப்பினை ஏட்டிலே எழுதும் வழக்கம் உண்டு. இந்நிலையில் யாழ்ப் பாணத்தில் ஓலையெனும் சொல் ஒருவரது சாதகம் குறிக்கப்பெற்ற ஏட்டினையும் குறிக்கும். அச்சு வழக்குப் பெருகியுள்ள நிலையிலும் சடங்காசாரமாகப் பேணப்படும் நூல்களை இன்றும் ஏட்டிலேயே எழுதி வைத்திருக்கின்றனர். கண்ணகி கதை போன்ற கதைப் பாடல்கள், யாழ்ப்பாணத்துக் கரவெட்டியில் இன்றும் எழுத்து வழக்கு நிலையிலேயே போற்றப்படுகின்றமையைக் காணலாம். ஏட்டு வழக்கின் ஒருநிலைத் தொடர்ச்சியாகக் கொப்பித் தாள்களில் எழுதப்படும் கையெழுத்துப் பிரதிகளை முக்கியப்படுத்திக் கூறுதல் அவசியம். பிரித்தானிய ஆட்சியின் வருகையுடன் இந்த எழுத்தாவண முறைமை பெருவழக்காக வருகின்றது என்ற உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது. உதாரணமாக, இலங்கை யில் யாழ்ப்பாணத்தில் நிலவும் காணி உறுதிகளைக் குறிப்பிடலாம். தமிழகத்தில் நிலங்களுக்கான இந்த எழுத்தாவண முறைமையை 'பட்டா செய்தல்' என்று கூறுவர். தமிழக நிர்வாக மரபில் ஒவ்வாரு கிராமங்களிலுமுள்ள கர்ணம் என்னும் உத்தியோகத்தர் இவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையெழுத்துப் பிரதியான ஆவணங்களை வைத்திருந்தார் என்றுங் கூறுவர்.

நிர்வாக முறைமையில் காலனித்துவ ஆட்சியின்கீழ் அச்செழுத்துப் பரவிய முறைமை பற்றி விரிவான ஆய்வுகள் எதுவும் நம்மிடையே இல்லை. அச்சு என்றதும் நாம் நூல்கள், இதழியல் பற்றியே சிந்திக்கின்றோம். இந்த அச்செழுத்துக் குறிப்பாகத் தமிழில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் எவ்வாறு வழக்கு நிலைப் பட்டிருந்தது என்பதுபற்றிய விரிவான தரவுகள் நம்மிடத்தில்லை. அச்செழுத்துகளின் தொடக்கத்தை நாம் நூல்களுடனும், இதழ் களுடனுமே தொடங்குகின்றோம். பிரித்தானிய ஆட்சிக்காலத்திலே உ.வே.சா., சி.வை.தா. போன்றோருக்கு முன்னர் கிறிஸ்தவ மதத் தேவைகளுக்காகவும் பாடசாலைத் தேவைகளுக்காகவும் அச்சுக் கொண்டுவரப்பட்டது பற்றிய விரிவான வரலாறுண்டு. இதுபற்றிய தகவல்கள் இக்கட்டுரையில் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளன. (John Murdoch இன் A Catalouge of Printed Books inTamil - 1865 மிக முக்கியமான நூலாகும்). இதைவிட, கிறிஸ்தவ மதநிலையிலே தமிழில் நூல்கள் எழுதப்பெற்ற மரபொன்று இருந்து வந்தது. 'தமிழிலக்கியத்தில் மதமும் மானிடமும்' என்ற என்னுடைய கட்டுரைத்தொகுப்பில் கிறிஸ்தவர்களின் தமிழ்ப் பணி பற்றிய கட்டுரையில் பாக்கியமுத்து அவர்களை மேற்கோள்காட்டி 'Cartilha' எனும் எழுத்துப்படி பற்றிய வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளேன்.

தொடக்க காலத்து கிறிஸ்தவ எழுத்துக்களைப் பார்க்கும் பொழுது பெரும்பாலானவை பேச்சு வழக்குக்கு அண்மித்த நடையிலே அமைந்திருந்தமையை மனங்கொள்ளல் அவசியம். இவ்வுண்மையை நோக்கும்பொழுது தமிழின் அச்சு வழக்கு வளர்ச்சியின் ஒருபுறத்தில் இத்தகைய பேச்சு வழக்குக்கு அண்மித்த தானமொழியும் இன்னொரு நிலையில் இலக்கிய நூல்கள் அவற்றிற் கான உரைகள் ஆதியன மூலம் உயர் நிலைப்பட்ட எழுத்து வழக்கும் பேணப்பட்டு வந்தமையை அவதானிக்கலாம். பத்திரிகைகள், சஞ்சிகைகள் நிலைப்பட்ட வளர்ச்சி, இவ்விரண்டு நிலைக்கும் இடைப்பட்ட ஒரு தரநிலை வழக்கினை ஏற்படுத்தியிருத்தல் வேண்டும். அச்சுக்கும் சனநாயகமயப்பாட்டுக்குமுள்ள அந்நியந்தத் தொடர்புபற்றி பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்களின் 'தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைநடை வரலாறு' இரண்டாம் பதிப்புக்கு எழுதியுள்ள பின்னுரையிலே குறிப்பிட்டுள்ளேன். இங்கு அதிகாரப்பட்டு நிற்பது அச்செழுத்து வழிவரும் பாடங்கள் (text) பற்றியதாகும். அச்செழுத்துப் பாடங்களின் இயல்புகளை நோக்கும்பொழுது பிரதானமாக எடுத்துக் கூறப்பட வேண்டுவன:

அ) இவை பெரும்பாலானோரால் பெறப்படத்தக்கனவாக இருத்தல்.

ஆ) வழுக்களுக்கான சாத்தியப்பாடு குறைவாயிருத்தலும் பாடத்தைச் சரி பார்ப்பதற்கான வரன்முறையான கட்டுப் பாடுமாகும்.

மெய்ப்புப் பார்த்தல் மூலம் இதனை உறுதிப்படுத்திக் கொள் கிறோம். எனினும் ஆக்க இலக்கியங்கள் அச்சு நிலைப்பட வரும் பொழுது, முதலில் ஆசிரியரால் கையெழுத்துப் படியாக எழுதப் பெற்ற ஒன்றன் அடிப்படையாகவே அதற்கான பாடம் அமைக்கப் பெறுகிறது என்பது உண்மையாகும். நான் ஏற்கெனவே 'தமிழில் இலக்கிய வரலாறு' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளபடி நவீன காலத்துக்கு முந்திய தமிழிலக்கியங்கள் குறிப்பாக கி.பி.1400 க்கு முற்பட்ட இலக்கியங்கள் பிரதானமாகத் தொகுதிகளாகவே பேணப் பட்டுள்ளன.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, திரு முறை வகுப்பு, பாசுர வகுப்பு என்பன முக்கியமானவையாகும். இந்த வட்டத்துக்குள் வராத கி.பி. 1400 க்கு முற்பட்டவையான இலக்கியப் பாடங்கள் பற்றி நோக்கவேண்டும். அவற்றுள் முக்கிய மானவை அரசவை இலக்கியங்களாகும். இலக்கியவகைநிலை நின்று பார்க்கும்பொழுது கோவை, உலா என பல்லவர் சோழப் பெருமன்னர் கால அரசவை நிலைகளில் அரச புகழ்ச்சி பாடுவன வற்றைத் தொகுத்துப் பார்க்கும் மரபு இருந்திருக்கவில்லையென்றே கூறவேண்டும்.

அதைவிட்டால் அடுத்து முக்கியத்துவம் பெறுவது சமண, பௌத்தப் பள்ளிகளில் இயற்றப்பெற்றவையாகும். ஐஞ்சிறு காப்பிய மரபில் போற்றப்படும் நூல்கள் நிச்சயமாகப் பௌத்த, சமண பள்ளிகள் சார்ந்தனவாகவே இருந்திருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கும் துரதிர்ஷ்டவசமாக பௌத்த, சமண நிறுவனங்களின் நிலையில் இலக்கிய வரலாற்றைக் கூறாமல் நூற்பெயர், நூலாசிரியர் பெயர் கொண்டே இலக்கிய வரலாற்றுத் தரவுகள் தரப்படுகின்றன.

அடுத்து முக்கியத்துவம் பெறுவது உரையாசிரியப் பாரம்பரிய மாகும். பாட ஆய்வியல் நிலைநின்று பார்க்கும்பொழுது இந்த உரையாசிரியப் பாரம்பரியம் தங்கச்சுரங்கம் போன்றது. உரையாசிரியப் பாரம்பரியம் என்று பேசும்பொழுது அதற்குள்ளே பின்வருவன அடங்குகின்றன:

1. உரையொன்று எழுதப்படுவதற்கு அத்தியாவசியமாகவிருந்த புலமை நிறுவனச் சூழல் (யாருடைய தேவைக்காக எழுதப் பெற்றது, அம்மாணவ மையங்கள் யாவை போன்றவை).
2. உரையாசிரிய மையங்களில் கல்விநிலை முக்கியத்துவம்
3. உரைப்பாடக் கையளிப்பு. (''உரையாசிரிய மரபை ஆராயும் பொழுது அதனூடாகத் தமிழ் நாட்டின் புலமை மையங்கள் பற்றிய தரவுகள் எவையேனும் மேற்கிளம்புகின்றனவா?''). இதனைச் செய்யும்பொழுது, இப்பொழுது, நாம் 14,15ஆம் நூற்றாண்டின் பின்னரே எடுத்துப் பேசும் மடங்களின் பணி களைப் பல்லவர்காலப் பிற்பகுதி சோழர் காலப் பகுதிகளுக்கும் நிச்சயமாகக் கொண்டுவரவேண்டிவரும்.
4. பாடச்செப்பம் எவ்வாறு நிலைநிறுத்தப்பட்டதென்பதும் உள்ளக நிர்வாகங்களும் முக்கியமாகும். மேலும் ஏடெழுதுதல் பற்றிய தொழில் நுட்பம் எவ்வாறு ஒழுங்கமைக்கப் பெற்றி ருந்தது என்பதும் முக்கியமான ஒரு வினாவாகும்.

## V

ஏடெழுதுதல், வாசித்தல், பிரதிசெய்தல் ஆகியவை வழியாக ஏற்படக்கூடிய தவறுகள் பற்றி இன்னும் எவருமே எழுதவில்லை எனலாம். மேலைநாட்டு மரபில் எழுத்து மரபு ஒவ்வொன்றிலும் ஏற்படக்கூடிய, ஏற்பட்ட தவறுகள் பற்றி விரிவான, அறிவியல் பூர்வமான ஆய்வுகள் உள்ளன. இவ்விடயத்தில் நமது பதிப்பாசிரி யர்கள் தங்கள் அநுபவங்களைக் கூறும்பொழுதுதானும் இத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்ப விடயங்களைக் கூறவில்லை என்பது தெரிய வருகின்றது. இத்தரவின்மையை நோக்கும்பொழுதுதான் உ.வே.சா., சி.வை.தா. போன்றோர் தங்கள் பணிகளுக்கு ஏட்டுப் பரிச்சயமுடைய புலவர்களைப் பயன்படுத்தியிருப்பார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் போன்ற வரன்முறையான நிறுவனங்களில் ஏடுகளை வாசிக்கப் பயன்படுத்தப்பட்டவர்களின் பெயர்களே தெரியாதுள்ளது. உ.வே.சா. வின் 'என்சரித்திரம்' நூலிலும் அவருக்கு உதவியாக விருந்த பாட வாசிப்பு விற்பன்னர்கள் மிக மிகச் சிலரது பெயரே தரப்பட்டுள்ளன.

ஏட்டெழுதுதல் பற்றிய மரபுகள் பற்றிச் சிந்திக்கும்பொழுது சோதிடம், வைத்தியம் ஆகிய துறைகளிலும் ஏடுகள் எழுதப்பட்டு, பராமரிக்கப்பட்டுக் கையளிக்கப்பட்ட முறைமையினையும் அறிந்துகொள்ளல் வேண்டும்.

## VI

அச்சு ஊடகத்தின் வருகையுடன் மேற்கிளம்பும் எழுத்துகள் பற்றிய பாடஆய்வுப் பாரம்பரியம் இன்னும் தொடக்கப் பெறவில்லையென்றே கூறவேண்டும். இவ்விடயத்தில் அச்சுப் பாடத்தில் நம்பிக்கையீனச் சாத்தியப்பாடு உண்டென்ற எண்ணம் நிலவுவதாகக்கூடத் தெரியவில்லை. இது அச்சு முறைமையின் பிரதானம் பற்றியும் அதன் மேல்நிலை முக்கியத்துவம் பற்றியும் தமிழ்ச் சூழலில் நிலவும் உயர்மதிப்பினை உணர்த்துவதாக அமைகின்றது. ஒரு நூல் அச்சிற் கொண்டுவரப்படுவதை 'அச்சு வாகனம் ஏற்றுதல்' என்று குறிப்பிடும் மரபை நோக்கவும். யானை, குதிரை போன்ற வாகனங்களில் (ஏறி) பலர் காண உலா வருவது போன்று அச்சில் ஏற்றப்படும் எழுத்தும் பவனி வருகிறது என்ற உள்ளார்த்தம் இங்கு தொனிக்கிறது எனலாம். அச்சுப்படிவ நிலையிலேயே தவறான வாசிப்புகளுக்கு இடமுண்டு என்பதனைப் பாரதியின் கவிதைப்பாட வேறுபாடுகளிலே தெரிகின்றமையை ரகுநாதன், கைலாசபதி ஆகியோரது ஆய்வுகள் வழியாகத் தெரிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையிலே குறிப்பிட்டுள்ளபடி தமிழிற் புனைகதை செவ்விதாக்கம் இன்னும் சரியாக மேற்கொள்ளப்படவில்லை யென்பதை 'புதுமைப்பித்தன் - விமர்சனங்களும் விஷமத்தனங் களும்' என்ற ரகுநாதன் நூலிலிருந்து காணலாம். புதுமைப்பித்தன், மாப்பசான் போன்ற மேலைநாட்டுச் சிறுகதை ஆசிரியர்கள் சிலரின் கதைகளைக் களவாண்டு எழுதினார் என்ற ஒரு கருத்தினை சுந்தரராஜன் போன்ற சில இலக்கிய விற்பன்னர்கள் எடுத்துக் கூறியவற்றை ஆராய்ந்துள்ள ரகுநாதன் அத்தகைய கதைகள் எழுதப்பட்ட சூழல்களையும் அக்கதைகளைப் புதுமைப்பித்தன் தான் வெளியிட்ட தனது சிறுகதைத் தொகுதிகளில் சேர்த்துக் கொள்ளவில்லையென்பதையும் எடுத்து விளக்கியுள்ளார். இவ் விவாதம் புனைகதை அச்சுப்பதிப்புக்கான செவ்விதாக்க நடை முறைகள் பற்றிய ம்க்கிய சில வினாக்களைக் கிளப்புகின்றது. எந்தவொரு ஆசிரியர்களது எழுத்துகளையும் அச்சிற் பதிப்பிக்கும் பொழுது அவ்வெழுத்துக்கான 'பாடவரலாற்றை' (textual history) எழுதுதல் வேண்டும். அண்மையில் பல முக்கிய புனைகதை எழுத் தாளர்களின் சிறுகதை, நாவல் தொகுதிகள் வெளிவந்துள்ளன. அவை பலவற்றில் மேற்குறிப்பிட்ட பாட வரலாற்றுக் குறிப்புகள் போதுமானவகையில் அமையவில்லை என்றே கூறவேண்டும். இப்பொழுதுங்கூட பாரதியார், பாரதிதாசன் கவிதைத் தொகுதிப் பதிப்புகள் பெரும்பாலானவற்றிற் பாடல்கள் எழுதப்பெற்ற காலவரன்முறையே சரியாக இல்லையெனலாம். தமிழ்ப்பல்கலைக் கழகத்துக்கென சீனி. விஸ்வநாதன் செவ்விதாக்கிய பதிப்பிலே காலவரன்முறை ஒழுங்குடன் பாடல்கள் தரப்பெற்றுள்ளன. பாரதி என்ற கவிஞனது வளர்ச்சியை அறிந்துகொள்வதற்கு அப்பதிப்பு பெரிதும் உதவுகின்றது. பாரதிதாசன் கவிதைகளின் பதிப்பிலே பேராசிரியர்கள் இளவரசு, இராமர் இளங்கோ ஆகியோர் இவ்விடயத்திற் கவனம் செலுத்தியுள்ளனர்.

20ஆம், 21ஆம் நூற்றாண்டு ஆக்க இலக்கிய வெளியீடுகளைப் பொறுத்தவரையில் ஆசிரியரின் கையெழுத்துப் பிரதியையும் அச்சுப் பிரசுரப் பிரதியையும் ஒப்பிட்டு நோக்கி அவ்வாக்கங் களுக்கான பாட விமர்சனம் செய்யப்படவில்லை என்றே கூறலாம். புதுமைப்பித்தன், கு.பா.ரா. ஆகியோரது படைப்புகளுக்கு இத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகைய செவ்விதாக்கம் மிக்க பயனைத் தரும். புதுமைப்பித்தன் மணிக்கொடிச் சிறுகதைகளை வீ. அரசு அவர்கள் கவனத்தை ஈர்க்கும் வகையிற் செவ்விதாக்கம் செய்துள்ளார். இலக்கிய வரலாற்றுச் செழுமை மிக்கதான தமிழிலக்கியப் பயிற்சியில் பாட விமர்சனவியல் நிச்சயமாக எம்.ஏ. வகுப்பு மட்டத்திற் கட்டாய பாடமாக்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ.வே.சா.வின் பதிப்புப்பணி
## பாடவிமர்சனவியல் நோக்கு

*அந்நியர்கள் தமிழ்ச் செவ்வியறியாதார்*
*இன்றெம்மை ஆள்வோரேனும்*
*பன்னிய சீர் மஹாமஹோ பாத்தியா*
*யப்பதவி பிரிவின் ஈந்து*
*பொன்னிலவு குடந்தை நகர்ச் சாமிநா*
*தன்றனக்குப் புகழ் செய்வாரேல்*
*முன்னிவனப் பாண்டியர்நாள் இருந்திருப்பின்*
*இவன்பெருமை மொழியலாமோ?.........*
*பொதிய மலைப் பிறந்த மொழி வாழ்வறியும்*
*காலமெலாம் புலவோர் வாயில்*
*துதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்*
*இறப்பின்றித் துலங்குவாயே*

**- பாரதியார்**

I

தமிழ்ப்புலமை, தமிழ்ப்பிரக்ஞை பற்றிய வரலாறு எழுதுகையில் முக்கியத்துவம்பெறும் வீ. கனகசபைப்பிள்ளை (The Tamils 1800 years ago -1800 வருடங்களுக்கு முற்பட்ட தமிழர் எனும் நூலின் ஆசிரியர்) மற்றும் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை (தமிழக அரசநிலை தமிழ்வாழ்த்துப்பாவாகக் கொள்ளப்படும் பாடலை எழுதியவர்; மனோன்மணியம் சுந்தரனார் என்று போற்றப்படுபவர்) பிறந்த 1855ஆம் ஆண்டிலேயே உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் சாமிநாதஐயர் (உ.வே.சா.) அவர்களும் பிறந்தார் என்பது சுவாரஸ்யமான வரலாற்றொற்றுமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், உ.வே.சா.வின் 150வது வருட நினைவு மீட்பில் காணப்பெறும் உத்வேகம் மற்றைய இருவரது நினைவு மீட்புப் பற்றி, குறிப்பாக சுந்தரனார் பற்றிக் காணப்படாமை தமிழ் உணர்வு மீட்பு என்பது, பெரும்பாலும் வாயுபசார அரசியலாகவே உள்ளது என்பதற்கான ஒரு தடயம் எனும் உண்மையைக் காட்டி நிற்பதாகக் கொள்ளலாம்.

உ.வே.சா. காலமாவதற்கு ஏறத்தாழ 22வருடங்களுக்கு முன்னர், பாரதியார் அவர் புகழின் சாராம்சத்தைத் துல்லியமாக எடுத்துக் கூறியுள்ளார். தமிழிற் பழைய நூல்களை வெளிக்கொணர்ந் தமையே உ.வே.சா.வின் புகழுக்கான காரணம் என்பது தெளிவாக விளங்குகிறது.

பண்டைய தமிழ் நூல்களை அச்சில் வெளிக்கொணர்த லாகிய நிகழ்ச்சி தனக்கென ஒரு வரலாற்றினைக் கொண்டது. அச்சு ஊடகம் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டு, 1835இல் அது யாவராலும் பயன்படுத்தப்படலாம் எனப் பிரகடனப்படுத்தப் பட்டதன் பின்னரே தமிழின் பழமைச் சிறப்பை வெளிக்கொணர் பவையான இலக்கியங்கள் (சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், புறநானூறு, கலித்தொகை ஆதியன) அச்சிற் கொண்டு வரப் படலாயின.'

சி.வை.தாமோதரம்பிள்ளை, உ.வே.சாமிநாதையர் ஆகியோரு டைய ஆரம்பநிலை அச்சுப் பதிப்புகளே இவ்வெண்ணத்தை ஏற்படுத்தின.

ஆனால், 1835க்கு முன்னர் பிரிட்டிஷ் அரசாங்கமும் மிஷனரி மாரும் மாத்திரமே அச்சுரிமையைப் பெற்றிருந்த காலத்தில் பழைய தமிழ் நூல்கள் சில அச்சிடப் பெற்றிருந்தன என்ற உண்மை ஜோன் மொர்டொக் (John Murdoch) 1865 இல் வெளியிட்ட A Classified Catalogue of Tamil Printed Books எனும் நூலிலிருந்து தெரிய வருகிறது. 1835க்கு முன்னர் மிஷனரிமார்களாற் பயன்படுத்தப்பட்ட இடைக்கால, பண்டைக்கால தமிழ் நூல்கள் சில அச்சிடப் பட்டிருந்தன என்பதும் அந்நூல் மூலம் தெரிய வருகின்றது.

அந்நூலில் வரும் குறிப்புகளைப் பார்க்கும்பொழுது அவர்கள் பெரும்பாலும் நீதி நூல்கள் எனக் கருதப்படுபவற்றையே அச்சிட்டனர் என்பது தெரிய வருகின்றது (நாலடியார், திருக்குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியன வெளியிடப்பட்டிருந்தன). திருக்குறளின் முக்கியத்துவம் குறித்து பிரான்சிஸ் எலிஸ் வைட் (Francis Ellis Whyte) என்பவர் ஆங்கிலத்தில் எழுதியவற்றை நினைவுகூரல் வேண்டும். திரு. வைற் அவர்களது தென்னிந்திய இலக்கியங்கள் பற்றிய ஆய்வு, கல்கத்தாவிலிருந்து தொழிற்பட்ட பிரித்தானிய கீழைத்தேயவியல் அறிஞரான வில்லியம் ஜோன்ஸின் ஆய்வறிவளவு முக்கியத்துவ முடையதாக இன்று பேசப்படுகிறது (கால்டுவெல், போப் ஆகியோரது ஆய்வுகளை நோக்கும்பொழுது இவ்வுண்மை புலனாகின்றது என்பர்). 19ஆம் நூற்றாண்டில் தென்தமிழகத்தில் (திருநெல்வேலி) கிறிஸ்தவ தேவஊழியப்பணி புரிந்தவர்களின் தமிழ் ஈடுபாடு, கிறிஸ்தவப் பாதிரிமாரிடையே தென்னிந்தியாவின் முக்கியத்துவத்தை, குறிப்பாக அதன் அடிநிலைப்பண்பாடு, பிராமணிய இந்துமதப்பண்பாட்டுக் கட்டுக்கோப்புக்குப் புறம் பானது என்ற அபிப்பிராயத்தை உருவாக்கியிருந்தது. திராவிட மொழிக் குடும்பமென ஒன்றை இனங்காணுவதற்குக்கூட இத்தகைய ஓர் உந்துதலே காரணமாக இருந்திருத்தல் வேண்டும் எனச் சிலர் எழுதியுள்ளனர் (க.சுப்பிரமணியம்).

இங்கு இவ்விடயம் நினைவுறுத்தப்படுவதற்கான காரணம் தமிழ் நூல்கள் பற்றி, அவற்றின் பாரம்பரியம் பற்றி பிரித்தானிய காலனித்துவத்தின் ஆரம்பம் முதலிருந்து வந்த சிந்தனையைக் காட்டுவதற்கேயாகும்.

கிறிஸ்தவம் பற்றிய கற்பித்தலின்பொழுது தமிழ்நாட்டில் ஏற்கெனவே நிலவிய நீதி நூல்களைப் பயன்படுத்தினர் என்பது ஜோன் மொர்டொக் மூலம் தெரிய வருகிறது. கொன்றைவேந்தன், ஆத்திசூடி, நல்வழி, நன்நெறி, வெற்றிவேற்கை போன்ற நூல்கள் பற்றி ஜோன் மொர்டொக் குறிப்பிடுகிறார். எனினும் அவற்றைத் தாங்கள் பயன்படுத்துவதில் மிகுந்த கவனமாக இருக்க வேண்டியுள்ளது என்பதையும் அவர் மிக நுணுக்கமாக விளக்கியுள்ளார். இந்த நீதிநூல்களில் இலைமறைகாயாக வந்த இந்துமதக் கருத்துகள் பற்றி அவர்கள் மிகக் கவனமாகவேயிருந்தனர். வெற்றி வேற்கையைப் பயன்படுத்தவில்லை என்பது பற்றிய குறிப்பும் அந்நூலில் வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மாத்திரமல்லாமல் தமிழிலக்கியம் பற்றி அவர்கள் சேகரித்துக்கொண்ட தகவல்களில் மதுரையில் நிலவிய சங்கம் பற்றிய இந்து நிலைப்பட்ட ஐதீகங்களையும் ஜோன் மொர்டொக் குறித்துச் செல்கிறார். இவற்றுடன் தொடர்புடைய நூல்கள் பற்றியோ, அவற்றின் காலம் பற்றியோ தெளிவின்மை காணப் பட்டாலும் அத்தரவுகள் பற்றிக் கிறிஸ்தவ பாதிரிமாரும் அறிந்திருந் தனரென்பது முக்கியமான செய்தியாகும்.

## II

1835க்குப் பின்னர் சுதேசிகளிடம் அச்சுரிமை வந்ததன் பின்னர் பாரம்பரிய மீட்பு முக்கியமாவது இயல்பே. இவ்விடயத்தில் 1835இன் பின்னர் ஆறுமுகநாவலரின் (1822-1879) ஈடுபாடு மிக முக்கியமானதாகும். உ.வே.சா., சி.வை.தா. ஒப்பாய்வு பற்றிய வாதவிவாதங்களிடையே ஆறுமுகநாவலரது பதிப்புப் பணி தமிழிலக்கிய வரலாற்றில் முற்றிலும் மறக்கப்பட்டுவிட்ட ஒரு விடயமாகவே காணப்படுகிறது.

ஆங்கில ஆட்சியை வரவேற்கும் அதேவேளையில் கிறிஸ்த வத்தின் ஊடுருவலையும் நிலைநிறுத்துகையையும் எதிர்த்த ஆறுமுகநாவலர் தமது சைவ மீட்பு முயற்சிகளில் எவ்வாறு கிறிஸ்தவம் வழிவந்த உத்திகளைப் பயன்படுத்திக்கொண்டாரோ அதேமுறையில் நூற் பதிப்புக்கும் வருகின்றார். சைவ வினா விடையை எழுதிய ஆறுமுகநாவலர் பெரியபுராணப் பாடல்களை வசனரூபமாக வெளியிட்டமையை இங்கு மனங்கொளல் வேண்டும்.

நாவலரின் பதிப்பு முயற்சிகளில் இலக்கண நூல்கள் முக்கியம் பெறுவதனை அவதானித்தல் வேண்டும். தொல்காப்பியம் சொல்ல திகாரத்தைப் பரிசோதித்த நாவலர் நன்னூற்காண்டிகை உரையைப் பதிப்பித்துள்ளார் என்பது மிக முக்கியமான ஒரு செய்தியாகும்.

தமிழில் உரைநடைவழி எழுத்தை மேற்கொண்டு அதனை வளர்த்தெடுத்த நாவலர் தமிழ்க் கையாளுகைகளுக்கு வேண்டிய தெளிவான முறையை வழங்கும் இலக்கண வழிகாட்டியான இலக்கண வினாவிடையை எழுதினார். இது தமிழின் நவீன மயப்பாட்டுக்கு மிக முக்கியமான பங்களிப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலக்கியப் பாடமீட்பில் ஆறுமுகநாவலருக்குரிய இடம் இன்னும் சரியாகத் துணியப்படவில்லையென்றே கூறல் வேண்டும்.

ஆறுமுகநாவலரின் பதிப்பு முயற்சி தமிழ் நூல் வரலாற்றில் முக்கியமானதொன்றாகும். கிறிஸ்தவத் தாக்கத்தை எதிர்கொள்ள அவர் பெரும்படியாக இருநிலைப்பட வகுக்கப்படத்தக்கதான நூல்களை வெளியிட்டார்.

முதலாவது வகை: அவர் தாமே எழுதியவை. இவற்றுள்ளும் நான்கு வகைகளினை அவதானிக்கலாம்.

1. கிறிஸ்தவர்களோடு நடத்திய விவாத எழுத்துகள்.
2. சைவசமய விளக்கத்துக்காக எழுதியவை.
3. முக்கிய சைவச்செய்யுள் நூல்களை உரைவடிவில் எழுதியவை.
4. பாடப்புத்தகங்கள் (கிறிஸ்தவர்கள் பாலபோதம் என்று எழுத இவர் பாலபாடம் என எழுதினார்).

இரண்டாவது வகை: ஏற்கெனவே எழுதப்பட்டுள்ள தமிழ் நூல்களைப் பதிப்பித்தமையாகும். இவற்றினுள் பெரும்படியாக மூன்று நிலைகளைக் கூறலாம்.

1. இலக்கண நூல்கள்.
2. சைவத்தளத்தைக் கொண்ட இலக்கியங்கள்.
3. முற்றிலும் சைவ சமயம் சார்ந்தவை.

நாவலர் நூற்றாண்டுவிழா நூலிலே தரப்பட்டுள்ள பட்டியலை ஆதாரமாகக்கொண்டு நோக்கும்பொழுது (1979) கீழ்க் காணும் வகைகளிற் பதிப்புகள் அமைவதைக் காணலாம் (தரப் பட்டுள்ள பட்டியல் நம்பகமானது, பூரணமானது). அவற்றிலிருந்து சில கீழே தரப்படுகின்றன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சைவ சமய நூல்கள்:**

அருணகிரியந்தாதி -1931, 14ஆம் பதிப்பு

அனுஷ்டான விதி -1896, 19ஆம் பதிப்பு

உடையவர் உபயம் - வருடம் குறிப்பிடப்படவில்லை

உபநிடதம் மூலமும் உரையும் -1874, 2ஆம் பதிப்பு

காசித்துண்டி விநாயகர் திருவருட்பா -1935, 5ஆம் பதிப்பு

சிதம்பர மான்மியம் -1895, 4ஆம் பதிப்பு

சிவதத்துவ விவேகம் -1913, 4ஆம் பதிப்பு

சைவசமய நெறி -1955, 8ஆம் பதிப்பு

**சைவ இலக்கிய நூல்கள்:**

ஆத்திசூடி, கொன்றை வேந்தன் -1933, 2ஆம் பதிப்பு

கந்தபுராணம் -1869

கந்தரலங்காரம், கந்தரனுபூதி -1925, 17ஆம் பதிப்பு

கோயிற்புராணம் -1868, 2ஆம் பதிப்பு

சிதம்பர மும்மணிக்கோவை -1867

சிவஞானபோதமும் பொழிப்புரையும் -1885

சேதுபுராணம்- மூலம் , 1866

திருக்கருணை வெண்பா அந்தாதி -1927, 5ஆம் பதிப்பு

திருக்கருவைப் பதிற்றுப்பத்து அந்தாதி -1926, 7ஆம் பதிப்பு

திருக்கோவையார் -1860

திருச்செந்தூரகவல் -1926, 3ஆம் பதிப்பு

திருமுருகாற்றுப்படை - 1851

திருவாசகம்

திருவிளையாடற் புராணம் -1957, 13ஆம் பதிப்பு

பதினோராந்திருமுறை -1924, 3ஆம் பதிப்பு

பெரியபுராணம்

மறைசையந்தாதி -1930, 14ஆம் பதிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கண நூல்கள்:**

இலக்கணக்கொத்துமூலமும்உரையும்-வருடம்குறிப்பிடப்படவில்லை

சூடாமணி நிகண்டு மூலமும் உரையும் -1867

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - (பரிசோதித்தது)

நன்னூல் காண்டிகையுரை -1968, 25ஆம் பதிப்பு

நன்னூல் விருத்தியுரை சங்கரநமச்சிவாயர் உரை -1887

பிரயோக விவேகம் மூலமும் உரையும் -1882

தருக்க சங்கிரகமும் அதனுடைய தருக்க சங்கிரக தீபிகையும் -1861

திருவேங்கடையர் செய்த உபமான சங்கிரகமும், புகழேந்திப்புலவர் செய்த இரத்தினச் சுருக்கமும் -1926, 5ஆம் பதிப்பு

ஆறுமுகநாவலரது பதிப்பு நடைமுறை பற்றிப் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் கட்டுரையாசிரியருடனான உரையாடல் ஒன்றின்பொழுது கூறியவை முக்கியமானவை. நாவலர் முக்கியமான நூல்களையே பதிப்பித்தார். பதிப்பின் பின்னரும் அவர் பாடங்களை ஒப்புநோக்குவதில் அதிக கவனம் செலுத்தினார். நாவலர் பதிப்புநூல் ஒன்றின் இரண்டாவது அல்லது அதற்கு மேற்பட்ட பதிப்பு அவர் வாழ்ந்த காலத்திலேயே வந்ததென்றால் அத்தனை பதிப்புத் திருத்தங்கள் வந்ததென்று கொள்ள வேண்டும்.

சி.வை.தா, உ.வே.சா. பதிப்பித்த நூல்களோடு வைத்து நோக்கும்பொழுது நாவலரின் பதிப்புகள் மீண்டும் மீண்டும் அச்சிடப்பெற்றன என்பது தெரியவருகின்றது. இதற்குக் காரணம் அவர் பதிப்பித்த நூல்களுட் பல சைவமதப் பாராயண நூல்களாகவும் இருந்தமையாகும். உண்மையில் நாவலர் யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்கத்து சைவ மக்களிடையே சைவ இலக்கியங்கள் பற்றிய வாசிப்பினை ஊக்குவித்தாரென்றே கூறல்வேண்டும். நாவலரவர்கள் திருக்குறளையும் வில்லிபுத்தூராரது மகாபாரதத்தையும் பதிப்பித்திருந்தார்.

நாவலர் அவர்களின் பதிப்புச் செம்மை விதந்து போற்றப்பட வேண்டியதாகும். ஏனெனில் அச்சுக்காலத்துக்கு முந்திய நூல்கள் சிலவற்றின் பாடமீட்பு வரன்முறையான ஒரு வழியில் இவரிடத்தும் காணப்படுகின்றது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## III

அடுத்து உ.வே.சா. அவர்களின் பதிப்புப் பணி பற்றியும் அப்பணி பற்றிய விவாதிப்புகள் பற்றியும் நோக்குவதற்கு முன்னர், இவர்களில் உ.வே.சா.வும் சி.வை.தா.வும் முக்கியப்படுத் தப்படுவதற்கான இலக்கிய வரலாற்றுக் காரணத்தை அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது.

இந்தியா முழுவதும் பிரித்தானிய ஆட்சியின்கீழ் கொண்டு வரப்பட்டபொழுது ஏறத்தாழத் தென்னிந்தியாவின் பெரும்பகுதி Madras Presidency என ஒரு மாநிலமாக ஆக்கப்பெற்றது. ஹைதராபாத், திருவனந்தபுரம், மைசூர், கொச்சி போன்ற பாரம் பரிய சமஸ்தான ஆட்சிகள் நிலவிய இடங்களைத் தவிர்ந்த தென்னிந்தியப் பகுதிகள் முழுவதையும் ஒரு நிலத்தொகுதியாகக் கொண்டனர்.

வடக்கில் மொகலாய ஆட்சி, ராஜபுத்திரர்களின் அதிகாரம், மகாராஷ்டிரத்தில் சிவாஜியின் எழுச்சி போன்று தெற்கில் 17ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் அரசியல் முக்கியத்துவமுடைய ஆட்சி எதுவுமே இருக்கவில்லை. விஜயநகரப் பேரரசின் படிப்படியான சிதைவு தொடங்கியதும் (1565) மேற்கிளம்பிய நாயக்கத்தானங்கள் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தெற்கு நோக்கி வந்த மொக லாயப் படைகளுக்குக் கீழ்ப்படிந்துவிட்டன. 18ஆம் நூற்றாண்டில் கர்நாடகப் பிரதேசத்தில் பிரெஞ்சு மேலாதிக்கம் நிலவிற்றெனினும் 1761இல் பிரித்தானிய மேலாண்மை நிச்சயமாகிவிட்டது. தமிழகமோ நீண்டகால உள்நாட்டுப் போர்களினால் சிதைந்து போயிருந்ததனால் இக்காலகட்டத்தில் பஞ்சங்கள் பல நிலவின. ஆரம்பகாலப் பிரித்தானிய வைஸ்ராய்கள், குறிப்பாக மின்ற்டோ (Minto) மதராஸ் பிரசிடென்ஸியில் ஒரு தேக்கநிலையே காணப் பட்டது என்று கூறியுள்ளார்.

இந்திய உபகண்டம் முழுவதும் பிரித்தானிய ஆட்சி நிறுவப் பட்டதன் பின்னர், இந்திய உபகண்டத்தின் ஒருமை பற்றியும் ஒருங்குநிலை பற்றியும் வற்புறுத்தவேண்டிய ஒரு தேவை பிரிட்டி ஷாருக்கு ஏற்பட்டது. வில்லியம் ஜோன்ஸ் வழிவந்த பிரித்தானிய கீழைத்தேயவியல்வாதிகள் இந்தியாவினுடைய ஒருமைநிலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாக வைதீக இந்துப் பாரம்பரியத்தையும் சமஸ்கிருத முக்கியத்துவத்தையும் இவற்றினுள் இந்தியப் பண்பாடு முழுவதும் கொண்டு வரப்படுவதற்கான சாத்தியப்பாடு அமைந்ததையும் விதந்து கூறத்தொடங்கினர். (மாக்ஸ்முல்லர் இந்தோ - ஆரியத்தின் ஐரோப்பியத் தொடர்புகளைச் சுட்டிக்காட்டியுள்ளார்).

சென்னை ராஜதானியின் காலனித்துவ ஆட்சிச் செல்வாக்குடன் கிறிஸ்தவ நிலைப்பட்ட அறிவுத் தேடல்கள் வழங்கிய அறிவுச் சேகரிப்புடன் பிரதானமிக்க தென்னிந்திய பிராமணரல்லாச் சாதிகளின் முக்கியத்துவம் படிப்படியாக வளரத் தொடங்குகிறது. கர்நாடகாவின் கம்மா, கப்புச் சாதியினரும் ஆந்திரப் பிரதேசத்தின் ரெட்டிமாரும், நாயுடுமாரும், மலையாளத்தின் நாயர்மாரும், தமிழ் நாட்டின் சேலம், திருநெல்வேலிப் பகுதி முதலியார் மற்றும் பிள்ளைமாரும் (வேளாளர்) முக்கியத்துவம் பெறத்தொடங்குகின்றனர்.

தென்னிந்தியாவில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியினர் பிராமணரல்லாதார் என்ற சமூகப் பகுப்பை உணர்ந்து தொழிற்படலாயினர். கால்டுவல் போன்ற கிறிஸ்தவப் பாதிரிமாருடைய ஆராய்ச்சிகள் தென்னிந்தியாவின் பண்பாட்டு ஒருமையை வலுப்படுத்தின. இந்தப் பின்புலத்தில் எழுதப்பெற்ற இந்திய வரலாற்று நூல்கள் தென்னிந்தியாவை வட இந்தியாவுக்கு வழங்கிய முக்கியத்துவத்திற்கு மாறாக ஒரு வரலாற்று வளமற்ற ஒரு பிரதேசமாகவே சித்திரித்தன. வின்ஸன் சிமித் என்பவரது ‘இந்திய வரலாறு’ (A History of India) எனும் நூல் மேற்குறிப்பிட்ட விடயத்திற்கு நல்ல உதாரணமாகும்.

அனைத்திந்திய மட்டத்தில் வரலாற்றுப் புறக்கணிப்புக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்த தென்னிந்தியாவுக்கு, குறிப்பாகத் தமிழகத்திற்கு பண்டைத் தமிழ் நூல்களின் பாடமீட்பு ஒரு புதிய அம்சத்தினை முனைப்புறுத்தியது. கன்னடம், தெலுங்கு உட்பட்ட தென்னிந்திய மொழிகள் பெரும்பாலும் வடமொழிச் செல்வாக்குடைய இலக்கியங்களையே தமது தொடக்கநிலை எழுத்திலக்கியங்களாகக் கொண்டிருக்க, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளிக்கொணரப்பட்ட பண்டைய தமிழிலக்கியங்களோ சமஸ்கிருத மேலாண்மைக்கு முற்றிலும் ஆட்படாப் பண்பினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கொணர்ந்தன. அதாவது தம் தோற்றத்துக்கும் ஊட்டத் துக்கும் சமஸ்கிருத இலக்கியத்தை நம்பியிருக்காத ஒரு இலக்கியப் பாரம்பரியத்தை வெளிக்கொணர்ந்தன. சீவகசிந்தாமணி முதல் சிலப்பதிகாரம் வரையிலான புதிய பதிப்புகள் இவற்றுக்கு வழிவகுத்தன. இந்த வகையிலே தான் சி.வை.தா. பதிப்பித்த தொல்காப்பியப் பொருளதிகாரம் ஒரு திசை திருப்பமாக அமைந்தது.

வடமொழிப் பண்பாட்டினின்றும் முற்றிலும் வேறுபட்ட மூல ஊற்றினைக்கொண்ட ஒரு சமாந்தரமான பண்பாடு தமிழ் நாட்டில் கிறிஸ்துவுக்கு முந்திய காலத்திலேயே நிலவிற்றென்பது இந்நூல்களாற் பெறப்பெற்றது. பிற்காலத்தில் சங்க இலக்கியத் தொகுதிகள் என தொகுநிலையில் பார்க்கப்படுவனவான புற நானூறு, பதிற்றுப்பத்து, குறுந்தொகை, ஐங்குறுநூறு ஆதியன தனித்தனியே வெளிவந்தபொழுது இந்த வடமொழிசாராத் தமிழ்ப்பேறு பற்றிய தரவுகளும், தகவல்களும் வெளியேகொண்டு வரப்படலாயின.

இந்த நூல்களின் வருகை இந்திய வரலாற்றுப் போக்கி னையே மாற்றியது. வி. கனகசபைப்பிள்ளையின் 'The Tamils Eighteen Hundred Years Ago' *(1903)* என்ற ஆங்கில நூல் வெளி வந்தபொழுது, சிலப்பதிகாரம், புறநானூறு போன்ற நூல்களிலே காணப்பட்ட தகவல்கள் இந்திய வரலாற்றுப் பார்வையையே மாற்றியமைத்த முறைமை பற்றி அக்காலத்தில் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகவிருந்த ஹேமச்சந்திரராய் மிகுந்த புல்லரிப்புடன் எடுத்துக் கூறியதை அவரின் மாணவர்களுள் ஒருவரான இக் கட்டுரையாசிரியர் நேரில் அநுபவித்துள்ளார் (பேராசிரியர் ராய், 'The Dynastic History of Northern India' என்ற நான்கு தொகுதி நூல்களை எழுதிய பெரும் பேராசிரியர். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1950களில் வரலாற்றுப் பேராசிரியராக இருந்தவர்).

**இத்தகைய பெரிய வரலாற்றுப் பார்வை மாற்றத்தை ஏற் படுத்திய நூல்களைப் பதிப்பித்தவர்கள் என்ற பெருமை காரணமாக இப்பதிப்பாசிரியர்கள் தமிழ் மக்களிடையே போற்றப்படலாயினர்.** பாரதியினுடைய பாடலிலேயே இக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து தொக்கி நிற்பதைக் காணலாம். அதாவது உ.வே.சாமிநாதையர், சி.வை.தாமோதரம்பிள்ளை ஆகியோர் மூலமாகவே இந்த நூல்கள் பிரதானமாக வெளிக்கொணரப்பட்டன. இதனாலேயே இவர்கள் முக்கியப்படுத்தப்படுகிறார்கள்.

உ.வே.சா. அவர்களுக்கு 1906ஆம் ஆண்டிலேயே 'மஹா மஹோபாத்தியாய' என்ற பட்டம் வழங்கப்படுகிறது. சமஸ்கிருத மொழிக்காக அல்லாது தமிழுக்கு மாத்திரமே செய்த பங்களிப்புக்காக சமஸ்கிருதப் பாரம்பரியத்தில் வரும் உயர்ந்த பட்டங்களில் ஒன்று (பெரும் பேராசிரியர் என்ற கருத்துடைய மஹா உபாத்தியாய 'மஹோ பாத்தியாய' இது ஒரு குணசந்திப் புணர்ச்சியாகும்). வழங்கப்படுகிறது என்பதனை மனத்திருத்திக்கொள்ளல் அவசியம். இதனை அரசாங்கமே வழங்கியது என்று பாரதியார் குறிப்பிடுகின்றார்.

இவ்விடயம் மிக உன்னிப்பாகச் சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும். உ.வே.சா. அவர்களையே முதலில் முதல்நிலைப் படுத்தும் தன்மை காணப்பட்டது. முனைவர் வெங்கடாசலபதி அவர்கள், சென்ற 'காலச்சுவடு' இதழில், குறிப்பிட்டுள்ள ஓர் அம்சம் முக்கியமானதாகும். சி.வை.தா. 1901இல் காலமாக உ.வே.சா. அவர்களுக்கு அவரது மறைவு வரை (1942) பெருத்த சவாலாகப் பதிப்பாசிரியர் எவருமே இருக்கவில்லை என்பது வரலாற்றுண்மையாகும். இந்தப் பெருமை காரணமாக உ.வே.சா. அவர்கள் அக்காலத்தில் அன்னி பெஷன்ற் (Anne Besant) உடன் தொடர்பு கொண்டதும், ருக்மணிதேவி அருண்டேலினால் நடத்தப் பெற்றதுமான கலாக்ஷேத்திராவினுள் உள்வாங்கப்பட்டமையும் நடந்தேறின. அவருக்கு வழங்கப்பட்ட கௌரவம் தென்னிந்தியா முழுவதினதும் பேரறிஞன் ஆசிரியன் என்ற கருத்துப்பட வரும் தாக்ஷிணாத்திய கலாநிதி 'மஹா மஹோபாத்தியாய',தாக்ஷிணாத்திய என்பதன் கருத்து தக்காணத்து' (தென்னிந்தியாவின் Deccan) என்பதாகும்.

உ.வே.சா. அவர்கள் மாத்திரமே தமிழ் நூல்களை மீளப் பதிப்பித்தவர் என்று கொண்டாடும் மரபு மேலோங்கி சி.வை. தாமோதரம்பிள்ளையினுடைய முக்கியத்துவம் படிப்படியாகக் குறைக்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுருங்கக் கூறின் பழந்தமிழிலக்கியப் பதிப்பாசிரியர் களாகிய உ.வே.சா., சி.வை.தா. ஆகிய இருவரையும் முதல் நிலைப்படுத்தும் பண்பு தோன்றியமைக்குக் காரணம், பண்டைய தமிழ் நூல்கள் இந்திய வரலாற்றுப் பின்புலத்தில் ஏற்படுத்திய தாக்கமேயாகும்.**

## IV

இப்பதிப்பாசிரியர்களது சிறப்புகள் வற்புறுத்தப்பட்டு வந்துள்ள முறைமையினை நோக்கும்பொழுது, இவர்கள் அந் நூல்களை வெளிக்கொணர்ந்ததில் அநுபவித்த சிரமங்கள் பற்றியே அதிகம் கூறப்பட்டுள்ளது. இவை கூறப்பட்டுள்ள அளவுக்கு பதிப்பிப்பதில் அவர்கள் கையாண்ட வழிமுறைகள் பற்றி அதிக ஆராய்ச்சிகள் செய்யப்படவில்லையென்பது புலனாகின்றது. இவ்விடயம் சற்று ஆழமாக நோக்கப்பட வேண்டிய ஒன்றாகின்றது. இது பற்றிப் பின்னர் பார்ப்போம். அதற்கு முன்னர் மீட்கப்பட்ட நூல்கள் பற்றிய சில முக்கியமான வினாக்கள் உள்ளன.

இந்நூல்கள் மீட்கப்பட்டபொழுது இந்நூல்களின் பயில்வு பற்றிய ஒரு புலமைப் பாரம்பரியம் நிலவிற்றெனின், அதன் இயல்புகள் யாவை? இந்த வினாவுக்குள் பின்வருவன அடங்கும்:

1. ஆசிரிய மாணவ முறைமை.
2. இவற்றுக்கான பயில்வுகள் நடந்திருக்கக்கூடிய இடங்கள், மையங்கள்.
3. எழுத்துகள் (நூல்கள்) காணப்பட்ட நிலைமை. இவை தமிழ் நாட்டிற் பிரதானமாக ஏடுகளாகவே இருந்தன.
4. ஏடெழுது பாரம்பரியத்தின் இயல்புகள், அந்தப் பாரம் பரியம் தலைமுறைக்குத் தலைமுறை கையளிக்கப்பட்ட முறைமைகள்.
5. பாடமீட்பு நடைமுறைகள் சரியான பாடமீட்புக்கான அகநிலை உத்தரவாதங்களைக் கொண்டவையா என்பது முக்கியமாகும். இன்னொரு வகையாகக் கூறினால் பாடக்கையளிப்புமுறை யாது? (textual transmission). இது தமிழிற் பிரதானமாக ஏடுகள் வழியாகவே வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.வே.சா., சி.வை.தா. பற்றிய தரவுகள் மூலம் இவற்றுக்கான விடைகள் உய்த்தறியப்படக்கூடியனவாக உள்ளனவெனினும், இத்தகவலின்மை நமது இலக்கிய வரலாறெழுதுமுறையில் நாம் எதிர்நோக்கும் ஒரு பிரதான குறைபாடாகும். ஒவ்வொரு காலத்திலும் அந்தந்தக் காலங்களிலே வாழ்ந்த புலவர்கள், தோன்றிய நூல்கள் எவையெவை என்பது பற்றிச் செலுத்தப்படும் புலமைச் சிரத்தையளவுக்கு, அக்காலத்துத் தமிழ்க் கல்விச்சூழல் பற்றி, பயில்வுமுறைகள்பற்றி, புலமைப் பாரம்பரியம்பற்றி எதுவும் இப்பொழுதுள்ள இலக்கிய வரலாற்று நூல்களிற் காணப்படவில்லையென்பது நன்கு தெரிந்த உண்மையே.

அவ்வக் காலச்சூழமைவுகளுள் இவை எவ்வாறு நடந்தன என்பது பற்றிய தெளிவு நமக்கு இன்று வரை இல்லையென்றே கூற வேண்டும். உதாரணத்துக்கு உரையாசிரியர் மரபை எடுத்துக் கொள்வோம். உண்மையில், பண்டைய நூல்கள் மீளப் பதிப்பிக் கப்படும்பொழுதே அவற்றினூடாகவே நாம் உரையாசிரியர் பாரம் பரியத்தையும் மீட்டெடுத்துள்ளோம். ஆனால், இளம்பூரணரின் மாணவர்கள் யாவர்; தொல்காப்பியத்தை அவர்கள் கற்கவேண்டிய தேவையாது; நச்சினார்க்கினியருடைய மாணவர்கள் இளம் பூரணரின் மாணவரிலிருந்து எவ்வாறு வேறுபட்டனர்; இளம் பூரணரோடு ஒப்பிடும்பொழுது நச்சினார்க்கினியருக்கிருந்த புலமைச் சவால்கள் யாவை; என்பன போன்ற வினாக்களுக்கு இன்னும் நம்மிடையே தெளிவான பதில் இல்லை என்றே கூறவேண்டும். நமது தமிழிலக்கிய வரலாற்று நூல்கள் இவை பற்றி இன்னும் சிந்திக்கவேயில்லை.

தொல்காப்பிய உதாரணத்திற்கே மீண்டும் செல்வோமானால் உரையாசிரியர்களை அவர்தம் இலக்கு மாணாக்கர் யாவர் என்ற வினாவிற்கும், குறிப்பிட்ட ஒரு உரையாசிரியரின் முயற்சி எத்தகைய பயில்வுப் பின்புலத்தில் மேற்கொள்ளப்பட்டது என்ற வினாவுக்குக்கூட பதில்களை இன்னும் நாம் தெளிவுபடுத்திக் கொள்ளவில்லை என்பது தெரிய வருகிறது. ஆனால், தொல்காப் பியத்திற்கான சேனாவரையர் உரையையோ, தெய்வச்சிலையார் உரையையோ வாசிக்கும்பொழுது தொல்காப்பியத்தை எவ்வாறு விளங்கிக்கொள்ள வேண்டுமென்பது பற்றிய கருத்துநிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாதங்கள் இடைக்காலத்தில் நிலவின என்பது தெட்டத்தெளி வாகத் தெரிகின்றது.

இந்த உரையாசிரியர்களின் விளக்க உரைகளை, சில பயில்வு மையங்களின் போக்காகக்கொள்வதா அன்றேல் தமிழகக்கல்வி முழுவதற்கும் பொதுவான ஒரு கல்வி முறையாகக்கொள்வதா என்பதும் ஆராயப்படாமலே உள்ளது.

இவ்வாறு நோக்குவது அத்தியாவசியமானதே. ஏனெனில் இந் நூல்கள் பதிப்பிக்கப்படுகின்றபொழுது, இவை பற்றிய பயில்வுப் புலமைநிலை யாது என்பது தெளிவுபடுத்தப்படல் அவசியமாகும். இந்தவகையில், சி.வை.தா., உ.வே.சா. இரண்டு பேரும் தங்கள் பதிப்புக்கான பின்புலம் பற்றித் தரும் தகவல்கள் சுவாரசியமானவையாகும்.

இலக்கிய வரலாற்று நிலைநின்று நோக்குகின்றபொழுது, ஒவ்வொரு காலப்பிரிவிலும், தோன்றுகின்ற இலக்கியங்கள் பற்றிய தரவுகள் எத்தனை முக்கியமானவையோ, அத்தனை முக்கியமானவை ஒவ்வொரு காலத்திலும் நிலவும் நூலுற்பத்தி முறைமை பற்றிய அறிவுமாகும். பொருளாதார உற்பத்திக்குச் சொல்லப்படுவதுபோல தோற்றுவிப்பு, தயாரிப்பு, சந்தைப்படுத் தல், நுகர்வோர் என்பன போன்ற பெரும்படையான தலைப்புகள் மாத்திரமல்லாமல் தோற்றுவிப்பில் தொழிற்படும் தொழில் நுட்பங்களும் முக்கியமானவையாகும். எழுதப்படும் ஏடு, அது எழுதுவதற்குத் தயாராக்கப்படும் முறைமை, அது கட்டப்படும் முறைமை என்பவையும் இலக்கியப்படைப்பு எவ்வாறு ஏட்டுருப் படுத்தப்படுகிறது என்பது பற்றிய நடைமுறையும் முக்கியமான தொழில்நுட்ப அம்சங்களாகும்.

## V

இலக்கியப் பாடக்கையளிப்பு வரலாற்றில் மேற்கூறியவை முக்கியமானவையாகும். மேலே கிளப்பப்பெற்ற வினாக்களின் அடிப்படையில் பாடக்கையளிப்புத் தொடர்பாகப் பின்வருவன வற்றைக் கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப் பதிப்புப்பயிற்சி மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர், 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி, 19ஆம் நூற்றாண்டின் முற் பகுதிகளில் இந்நூல்கள் பற்றிய பயில்வு பிரதானமாகச், சைவ மடங்களிலேயே காணப்பட்டதென்பது தெரியவருகிறது. இவ் விடயத்தில் திருவாவடுதுறை மடத்தின் வகிபாகம் மிகப்பெரிய தாக இருந்ததென்பது தெரிந்ததே. திருவாவடுதுறை மடத்தை மையமாகக்கொண்டு ஒரு புலமைமரபு தொழிற்பட்டு வந்த தென்பது உ.வே.சா.வின் 'என் சரித்திரம்' மூலமாகவும் சி.வை.தா. வின் பாயிரங்கள் மூலமாகவும் நன்கு தெரிய வருகின்றன. திருப்பனந்தாள் மடமும் இப்பயில்விலே தொடர்புபட்டிருந்த தென்று கூறலாம். திருவாவடுதுறை ஆதீனம் பிரதானமாகச் சைவ மரபுக்கே உரியது. ஆறுமுகநாவலரின் பதிப்புகளும் சைவம் சார்ந்தவையே.

வைஷ்ணவப் பாரம்பரியத்திற் பதிப்பு முயற்சிகள் எவ்வாறு இருந்தன என்பது பற்றிய தரவுகள் மிகக் குறைவாகவே எடுத்துக் கூறப்படுகின்றன. ஆயினும், திருப்பாசுரங்களுக்கான 'படிமரபு' மிக்க செழுமையான ஒன்றாகும். அப் படிமரபின் வளர்ச்சியையும், பேணுகையையும் பார்க்கும்பொழுது வைஷ்ணவ மடங்கள் பாடப் பேணு'கையிலும் பாடவிளக்கத்திலும் மிகுந்த கவனம் செலுத்தி வந்தன என்பது தெரியவருகிறது. இது மாத்திரமல்லாமல் அவர் களிடையே நிலவும் வடகலை, தென்கலை மரபுகள் காரணமாக வலுவான ஒரு விவாதமரபு நிலவிற்றெனக்கொள்ளலாம். 'பிரதி வாதி' 'பயங்கரம்' போன்ற பட்டங்கள் இந்த விவாத மரபின் ஆழத்தைக் காட்டுகின்றன (சைவ மரபில் தேவார திருவாசகங் களுக்கு உரை எழுதும் மரபு இல்லை).

சீவகசிந்தாமணியின் பதிப்புப் பற்றி உ.வே.சா. தரும் பின்புலத் தகவல்களை நோக்கும்பொழுது சமணக் கிரந்தங்கள் பயிலப்பட்ட தற்கான ஒரு நடைமுறை அவர் காலத்திலேயே இருந்து வந்ததென்பதும் அதுவும் சமண மதத்தைச் சார்ந்த வணிகப் பெருமக்கள், செல்வந்தர் ஆகியோராலேயே போற்றப்பட்டு வந்ததென்பதும் தெரிகிறது. ஆயினும் சமணப் பள்ளிகளின் தொழிற் பாடு இக்காலத்தில் காணப்படவில்லையென்பதும் நன்குத் தெளிவாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ நிறுவன நிலைப்பட்ட மேற்கூறியவற்றைவிட தமிழ்நூற் பயில்வுக்கென மதநிறுவனங்கள் சாராத ஒரு பயிற்று வித்தல் மரபு (18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதி) நிறுவன ரீதியாக இருக்கவில்லை என்றே கூறத் தோன்றுகிறது.

ஏடுகள் கிடைக்கப்பெற்ற முறைமை பற்றி உ.வே.சா., சி.வை.தா. ஆகிய இருவருமே தரும் தகவல்கள் வழியாக அவ் வேடுகள் பெரும்பாலும் தமிழ்ப் புலவர்களாக விளங்கியவர்களின் வீடுகளிலேயே இருந்துள்ளன என்பது தெரியவருகிறது. அது மாத்திரமல்லாமல் அவை ஒரு வரன்முறையான பயில்வுக்கு ஆட்படுத்தப்பட்டவை என்றும் சொல்ல முடியாதுள்ளது. ஏறத்தாழ 16ஆம் 17ஆம் நூற்றாண்டிலிருந்து இலக்கியங்களின் வழியாகத் தெரியவரும் புலவர்களுடைய சிரமநிலை இத்தகைய ஒரு மரபின்மையையே வற்புறுத்துகின்றது. புலவர்களினது வீடுகளி லிருந்து அல்லது அவர்களின் உறவினர்களின் வீடுகளிலிருந்து தான் பெரும்பாலான ஏடுகள் பெறப்பட்டன என்பது தெரியவருகிறது. யாரோ ஒருவர் பயன்படுத்திய பின்னர் அவ் ஏடுகள் பல காலமாகப் பயன்படுத்தப்படாமலே இருந்தன எனும் தகவல் முக்கியமான தாகும்.

இதற்கான பிரதானமான காரணம் ஏறத்தாழ 17ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரித்தானிய ஆட்சி நிறுவப்படும் வரை தமிழ் நாட்டில் நிலவிய ஆட்சிச் சிதைவே எனலாம். அத்துடன் தெலுங்கர்களான நாயக்கர்களின் ஆட்சியின்பொழுது உள்ளூர்ப் புலமைக்கு ஆதரவு வழங்கப் படவில்லை என்பதும், கோவில்களின் முகாமை முறையில் ஏற்பட்ட மாற்றங்களும் இக்கல்விச் சிதைவுக்குக் காரணங்களாக விருந்திருக்கலாம்.

இந்த நிலைமை காரணமாகவே சைவமடங்கள் மாத்திரம் முதன்மைப்படும்நிலை காணப்பட்டதெனலாம். ஏடுகள் பற்றிய செய்திகளையும் அவ்வேடுகளை அவர்கள் பெற்றுக்கொண்ட முறைமையையும் நோக்கும்பொழுது அரசியல் சமூக செல்வாக் குகள் முதன்நிலைப்படுகின்றமையைக் காணலாம். சேலம் இராமசாமி முதலியார் ஏடுகள் பல எடுக்கப்படுவதற்குக் காரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக இருந்திருக்கின்றார் என்பதை இங்கு மனங்கொள்ளல் வேண்டும். அவர் அரசாங்க உத்தியோகத்தராக விளங்கியவர்.

மடங்களில் பெறப்பட்ட ஏடுகளின் மீட்பினை நோக்கும்பொழுது, அவ்வேடுகள் ஒரு தொடர்ச்சியான பயில்வுப் பாரம்பரியத்தைச் சார்ந்தவையாகவல்லாது சிதைவுற்றுப்போன ஒரு பாரம்பரியத்தின் வழியாகவே பதிப்பாசிரியர்களுக்குப் பெரும் பாலும் கிட்டியுள்ளன எனும் உண்மை முக்கியமானதாகும். இத்தகைய ஏடுகளை வாசிப்பதிலுள்ள சிரமங்களை சி.வை.தா. விளக்கியுள்ளார்.

ஆயினும் இந்த மேற்கூறிய பொதுவான சிதைவினூடே மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் புலமை மரபு பற்றிய 'என் சரித்திர' வழித்தகவல்களை நோக்கும்பொழுது தனியாசிரியத் தமிழ்க் கல்விப் பாரம்பரியமொன்று தொடர்ந்து நிலவிற்று என்பது தெரிகிறது. ஆனால் அது அருகிப்போயுள்ள நிலையிலேயே இருந்தது என்பதும் தெரிய வருகிறது.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் விடயத்திலுங்கூட மடத் தொடர்புகளின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. சைவத்தமிழ்நூல்கள் பற்றிய ஏட்டுப் பாரம்பரியத்திற் பிராமணரல்லாத அறிஞர்களிடையே நிலவிய புலமை மரபின் தொடர்ச்சியைப் பெரும்பாலும் காணக்கூடியதாகவுள்ளது. பிராமண மடங்கள் வடமொழிப் பாரம்பரியத்தில் அதிக கவனம் செலுத்தியிருத்தல் வேண்டும்.

அடுத்து ஏடுகளின் பரம்பலை ஆதாரமாகக்கொண்டு பயில்வு மையங்களைப் பற்றிய உய்த்தறிவுக்குச் செல்வதாயின் ஏற்கெனவே பார்த்த சைவமடங்கள் போன்றவற்றைவிட, புவியியல் அடிப் படையில் யாழ்ப்பாணம் இந்த ஏட்டுப் பரம்பலில் ஒரு முக்கியமான இடத்தைப் பெறுவதை அவதானிக்கத் தவறக்கூடாது.

யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண இராச்சிய காலத்திலிருந்தே ஏட்டுப் பேணுகைப் பாரம்பரியமொன்று இருந்து வந்ததென்பது 'சரஸ்வதி பண்டாரம்' பற்றிய குறிப்புகளிலிருந்து தெரிய வருகின்றது. அதைவிட, மாவிட்டபுரம் முருகன் கோயில் போன்ற கோவில்களிலும் ஏட்டுப் பேணுகை நடைபெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிலும் பார்க்க முக்கியமான தரவு சாமிநாதையர் உட்படப் பதிப்பாசிரியர்கள் எல்லோருமே நூல்களைப் பதிப் பிக்கும்பொழுது யாழ்ப்பாணத்துப் பிரதியொன்றினையும் தாம் பார்த்தாகப் பதிப்பு முகவுரைகளிலே கூறியுள்ளமையாகும். மேலும் ஐங்குறுநூறு போன்ற பண்டைய இலக்கியங்கள் சில யாழ்ப்பாணத் திலேயே பதிப்பிக்கப்பெற்றன என்ற உண்மையையும் மனங் கொளல்வேண்டும். தொல்காப்பியத்திற்கான முக்கிய பதிப்புக் களிலொன்று (சி.கணேசையர் பதிப்பு) யாழ்ப்பாணத்திலிருந்து வந்ததாகும்.

மேலும் உ.வே.சா.வின் பதிப்புகள் சில பற்றிய விபரமான விடயப்பொருட்கண்டனங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந் துள்ளமை பற்றி வையாபுரிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளதையும் கவனத்தில் கொள்ளவேண்டும் (சி.வை.தா. பற்றிய குறிப்பின் பொழுது மேலும் சில விடயங்களை நோக்கலாம்).

தமிழரிடையே காணப்படும் ஏடுகள் பதஞ்செய்யப்பெற்ற பனையோலையில் எழுதப்பெற்றனவேயாகும். எழுதுவதற்கு எழுத்தாணி பயன்படுத்தப்பெற்றது. பனையோலை ஏடுகள் ஆகக்கூடியது 100-150 வருடங்களுக்குமேல் பயன்படுத்தப்பட முடியாதவையாகுமென்பர். இதனால் ஏட்டுப் பாரம்பரியப் பேணுகை என்பது பப்பிறஸ் (papyrus) , தோல் (parchment of skin) போன்று அல்லாது குறைந்தது இரண்டு தலைமுறைக்கு ஒரு தடவை மீட்டெழுதப்படல் வேண்டும். ஒல்லாந்தர் காலத்தில் எழுதப்பெற்ற யாழ்ப்பாணத்துக் காணித்தோம்புகளைப் பார்க்கும் பொழுது படியெடுக்கப்பட்ட முறைமை பற்றித் தோம்பினிறுதியிற் குறிப்பிடப்பட்டிருப்பது தெரியவரும்.

மட்டக்களப்பு ஏட்டுப் பாரம்பரியத்திலும் இத்தகைய மீட்டெ ழுதற் குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த மீட்டெழுதல் காரணமாக ஏற்படக்கூடிய வழுக்கள் எத்தகையவை என்பது பற்றியோ, பல்வேறு மையங்களில் மீட்டெழுதப்படும்பொழுது அவ்வப் பிரதேசங்களுக்குரிய வழக்குகள் வருமென்பது பற்றியோ விரிவான பாட நுண்ணாய்வும் நம்மிடையே இருப்பதாகக் கூற முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடெழுதப்படுவது எவ்வாறு தொழில்முறையாகப் பயிலப் பட்டது என்பதுவும் தமிழ்நிலையில் நமக்குத் தெரியாத ஒன்றே. வட இந்தியாவில் இதற்கென 'காயஸ்த' என்ற ஒரு சாதிக்குழுவினர் இருந்து வந்துள்ளனர். தமிழில் அத்தகைய தொழில் நிலைக் குழுக்கள் இல்லையென்றே கூறலாம். ஆனால், தொல்காப்பியம் போன்றவற்றில் நூற்பாடத்தில் வேறுபாடுகளுள்ளமையைப் பார்க்கும்பொழுது ஏட்டு வேறுபாடுகள் முக்கியம் பெறுவதைக் காணலாம்.

இளம்பூரணரே தமது உரையின் ஓரிடத்தில் **'விழ எழுதினார் போலும்'** என்று குறிப்பிட்டுள்ளார். பாட மீட்டெடுப்பின் பொழுது இத்தகைய தவறுகள் ஏற்படலாம்.

சிலவிடங்களில் பாடவேறுபாடுகளே உண்டென்பதை மறந்துவிடல்கூடாது. உதாரணமாகத் திருக்குறளில் உரையாசிரி யருக்கு உரையாசிரியர் குறள் வைப்பொழுங்கில் வேறுபடுவதை அவதானிக்கலாம். உதாரணமாக மணக்குடவர் உரையில் வரும் குறள் வைப்பு முறைமைக்கும் பரிமேலழகர் குறள் வைப்பு முறைமைக்குமிடையில் பெருத்த வேறுபாடு உண்டு. இத்தகைய வேறுபாடுகளை அறிவதற்கு ஏட்டுப்படிகள் மிக முக்கியமா கின்றன.

இத்தகைய விடயங்கள் பற்றிய விரிவான ஆய்வுகள் தமிழில் மிகக்குறைவு. தமிழிலே பதிப்புப் பற்றிய ஆராய்ச்சிகளைப் பதிப்பாசிரியர்களை மையமாகக்கொண்டே நோக்கிவிடுகிறோம்.

ஏடுகளிலிருந்து பெயர்த்தெடுக்கும்பொழுது எத்தகைய வழுக்கள் தோன்ற முடியுமென்பது பற்றிச் சிந்திக்கும்பொழுது பனையோலையிலான ஏடுகள் எவ்வாறு நோக்கினாலும் ஆகக் கூடியது ஏறத்தாழ 150 வருடங்களுக்குமேல் இருத்தல் முடியாது. இது காரணமாக ஏட்டிற் காணப்படும் எழுதுமுறை அந்த ஏட்டினை இப்பொழுது பயன்படுத்துபவரின் எழுதுமுறையிலிருந்து அதிகம் வேறுபடுவதாகக்கொள்ள முடியாது. பட்டைகள், தோல்களில் எழுதப்படுபவற்றின் நிலை வேறு. அவை நீண்ட காலத்திற் குரியவையாக இருக்கும்.

பட்டை, தோலிலுள்ளது போன்று எழுதப்பட்ட பாடங் களுக்கான வாசிப்புக் குறிப்புகள் எதுவும் தமிழில் ஏட்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரங்களில் எழுதப்பட முடியாது. இதனால், 'ஸ்கோலியம்' எனப்படும் குறிப்புரை தமிழில் இருக்க நியாயமில்லை. ஆனால், இந்த 'ஸ்கோலியப்' பாரம்பரியம் உரையாசிரியர் பாரம்பரியத்துக்கு மிக முக்கியமானது.

பதிப்புப் பணியின் சிரமம், இன்னல் பற்றிப் பேசும்பொழுது வாசிக்க முடியாத ஏட்டிலிருந்து தமது காலத்து எழுத்து வழக்குக்கு அவ்வேட்டிலெழுதப்பட்டுள்ளவற்றைப் பெயர்த்தெடுப்பதிலுள்ள சிரமங்கள் பற்றியே பதிப்பாசிரியர்கள் பேசியுள்ளனர். ஏட்டிற் காணப்பட்ட எழுத்துகளை வாசிப்பதிலுள்ள பொதுப் படையான சிரமங்கள் கூறப்படுகின்றனவே தவிர, அவை சாதாரணமாக அல்லது பொதுவாக வாசிக்கப்பட முடியாதிருந்தவையாகக் கூறப்படுவதில்லை. எனவே இவர்களுக்கிருந்த பெருஞ் சிரமம் 'கரலிகிதத்துக்குக்' (கையெழுத்து) கொண்டு வருவது தான்.

உண்மையில் தமிழ்க் கல்வெட்டாய்வாளர்கள் வாசிப்பின் பொழுது எதிர்நோக்கிய பிரச்சினைகளையோ அல்லது கிரேக்க நாடகங்களைப் பதிப்பித்தவர்களோ அல்லது "Beowulf " போன்ற ஒரு நூலினை (இது ஆங்கில இலக்கியத்தின் முதற் கட்டமாகும்) பதிப்பித்தவர்களோ எதிர்நோக்கிய எழுத்துநிலைப் பிரச்சினைகளையோ நமது பதிப்பாசிரியர்கள் எதிர்கொள்ளவில்லையென்பது தெரிகிறது.

## VI

இத்தகைய ஒரு பின்புலத்திலேயே உ.வே.சா.வினுடைய பதிப்பு முறையை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும். உ.வே.சா.வுக்குப் புகழ்தேடிக்கொடுத்த பதிப்புகளுக்குள்ளேயே பின்வருபவை முக்கியமானவை: சீவகசிந்தாமணி(1887), சிலப்பதிகாரம் (1892), புறநானூறு (1894), பத்துப்பாட்டு (1889). மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் உ.வே.சா. பயின்ற முறைமையும் பண்டைய தமிழிலக்கியங்களின் உரையாசிரியர் பாரம்பரியமும் குறிப்பாக நச்சினார்க்கினியருடைய உரைமுறைமையும் இவருடைய பதிப்பு முறையிலே தீர்க்கமான செல்வாக்குச் செலுத்தியுள்ளனவென்பதை உணரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாசிரியர் பாரம்பரியத்தில் முக்கியமாக அமைவது பாடலின் பொருளும் பாடலில் வருகின்ற பிரயோகங்களின் இலக்கண அமைதிகளும் முந்தைய பிரயோக வழக்குகளுமாகும். இவற்றினூடாகவே குறித்த பாடத்தின் பொருள் நிச்சயிக்கப்பெறும்.

ஐயரவர்களின் நூற்பதிப்பு முயற்சி வரலாற்றை நோக்கும் பொழுது சீவகசிந்தாமணி (1881), பத்துப்பாட்டு (1889), சிலப்பதிகாரம் (1892) போன்றவற்றுக்கு ஒரு வலுவான உரைப்பாரம்பரியம் உள்ளமை கவனிக்கப்பட வேண்டியதொரு உண்மையாகும். முதலிரண்டுக்கும் நச்சினார்க்கினியருரையும், சிலப்பதிகாரத்துக்குப் பழைய உரையொன்றும் (அரும்பதவுரையாசிரியர்) அடியார்க்கு நல்லாருரையும் உள்ளன.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் பாடம் சொல்லிக் கொடுக்கும்பொழுது குறிப்பிடப்பட்ட பாடத்தில் வரும் பதப் பிரயோகங்களின் பிற இலக்கிய ஆட்சி பற்றிக் கவனம் செலுத்தினாரென்பது 'என் சரித்திரம்' மூலம் தெரியவருகிறது. இம்முறை, தொடர்களின் கருத்து நிர்ணயத்துக்கு முக்கியமானதாகும்.

பொதுவாக ஐயரவர்களின் பதிப்புகளை நோக்கும்பொழுது அவருடைய பதிப்பு முறைமையின் அகக்கட்டமைப்பு இதுவேயென்பது பொதுநோக்கில் தெரிய வருகிறது. நூலினை அறிமுகம் செய்தலெனநூலின் விபரங்களைத் தந்துவிட்டு நூற்பாடத்தை (text) விளக்கும்பொழுது இம்முறையைக் கையாளுகிறாரென்பது தெரிகிறது.

புறநானூற்றினை உதாரணமாகக் கொண்டால் நூற்பாடத்தின் முன்னர், பாடினோர் வரலாறு, பாடப்பட்டோர் வரலாறு, திணையும், துறையும் என அவர் கண்ணில் முக்கியமானவையாகப்படுவனவற்றைத் தொகுத்துத் தந்துவிட்டு பாடஆய்வுக்கு வரும்பொழுது முதலில் பாடத்தைத் தந்து அதன்கீழ் திணை, துறை, புலவர் பெயர் ஆகியனவற்றைத் தந்து, அதற்குமேல் பாடபேதங்களைத் தருகின்றார். அடுத்து பாடலின் பொருளை எடுத்துக் கூறி, புறநூல் மேற்கோள்களையும் இலக்கண இலக்கியப் பயன்பாடுகளுக்கான சான்றுகளையும் தருகின்றார்.

ஐயரவர்களின் ஈடுபாடு சமண, பௌத்த மதங்களை அறிவதில் பெரிதும் காணப்பட்டதென்பது தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலைப் பதிப்பும் காப்பிய காலத்து நூல்கள் சிலவற்றில் வரும் பௌத்தம் பற்றிய குறிப்புகளும் பௌத்தம் பற்றிய ஆழமான ஆய்வுக்கு அவரை இட்டுச் சென்றன. இது பௌத்த தர்மம் பற்றிய விரிவான ஒரு நூலுக்குக் கால்கோளாக அமைந்தது எனலாம். சமணம் பற்றியும் இவ்வாறே ஆராய்ந்துள்ளார் என்பது தெரிய வருகிறது

சங்க இலக்கியப் பதிப்புகளினால் ஏற்பட்ட புலமை ஈடுபாடு காரணமாக 'சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும்' என்ற நூல் வெளிவந்தது. ஆயினும் பொதுப்படையாக நோக்கும்பொழுது இவருடைய புலமை ஈடுபாடு இலக்கியம் சார்ந்ததாகவே இருந்ததை அவதானிக்கலாம்.

உதாரணமாகப் புறநானூற்றுப் பதிப்பை எடுத்து நோக்கும் பொழுது புறநானூற்றில் பேசப்படும் அரசர்கள் பற்றிய தரவுகளைத் தொகுத்தார் எனினும், அவர்களின் வரலாற்று முக்கியத்துவத்தை, குறிப்பாக அனைத்திந்திய அடிப்படையில் நோக்கவில்லை யென்பது தெரிகிறது. **இவ்வாறு நோக்கும்பொழுது சி.வை.தா. தமது நூற்பதிப்பொன்றின்பொழுது காட்டிய புலமைச் சிரத்தைகளுக்கும், இவர் காட்டும் புலமைச் சிரத்தைகளுக்கு மிடையே வேறுபாடு இருப்பதனை நோக்கலாம்.**

உ.வே.சா. அவர்கள் பாடமீட்புச் செய்தபொழுது ஒரு பாடத்துக்கான (நூல்) பல ஏடுகளைத் திரட்டி வைத்துக்கொண்டு பாடமீட்பினைச் செய்துள்ளார். சிலவேளைகளில் ஏடுகளைப் பார்த்து எழுதப்பெற் றனவான கையெழுத்துப் பிரதிகளுமிருந்தன. ஒவ்வொரு நூலையும் பதிப்பிக்கும்பொழுதும் அதற்கான ஏடுகள் யார் யாரிடமிருந்து கிடைத்துள்ளன என்பதைக் குறித்துள்ளார்.

உ.வே.சா.விற்கு இவ்வேட்டுப் பிரதிகளை வழங்குவதில் இலங்கை அறிஞர்கள் பெரிதும் உதவியுள்ளனரென்பது தெரி கின்றது. சி.வை.தாமோதரம்பிள்ளை, வி. கனகசபைப்பிள்ளை முதலானோரே முன்வந்து ஏடுகளை ஐயரவர்கட்குக் கொடுத் துள்ளனர் என்பது தெரியவருகின்றது.

ஆயினும் 'என் சரித்திர'த்தில் வரும் சில குறிப்புகளும் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் 'தமிழ்ச் சுடர் மணி களில்' வரும் கூற்றும் ஐயரவர்கள் அந்தளவுக்குப் பகிர்வுணர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிடைத்த பிரதிகளுள் எதனைத் தாய்ப்பிரதியாகக் கொண்டார் என்பதோ தாய்ப்பிரதியாகக் கொண்டதற்கான காரணங்கள் பற்றியோ எதுவும் இவரது முகவுரைகளில் கூறப்படவில்லை.** எழுத்துத்தெளிவும் அதனால் வாசிப்புச் சுலபமுங்கொண்ட ஒரு பிரதியைத் தாய்ப்பிரதியாகக்கொண்டு மற்றவற்றை அதனுடன் இணைத்து வாசித்தார் என்ற எண்ணமே 'என் சரித்திர'த்தையும் முகவுரைகளையும் வாசிக்கும்பொழுது மேலோங்கி நிற்கின்றது. ஆனால் இந்த முறைமை பாடபேதங் களைத் தீர்மானிப்பதில் பல சிக்கல்களை உருவாக்கும். தமிழி லுள்ள உரைப்பாரம்பரியம் ஓரளவுக்கு நூலாசிரியரின் பாடத்தை அறிவதற்குதவுமெனினும் உரைசாராது வருகின்ற பாடப்பிரதி களில் எது உண்மையான நூற்பாடம் என்று கண்டறிவதில் சிக்கல்களை ஏற்படுத்தும். இத்தகைய ஓர் உதாரணத்தைப் 'பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்' எனும் நூலிலே சிலப்பதி காரம் பற்றி வரும் அதிகாரத்திற் குறிப்பிட்டுள்ளேன்.

அரங்கேற்றுகாதையில் வரும் 'ஐந்து மண்டிலத்தாள் கூடை போக்கி' என்பதற்கு 'ஐது மண்டிலத்தாள் கூடைபோக்கி' என வரும் பாடபேதம் உண்மையில் நூற்பாடமாக இருத்தல் வேண்டு மென்பதை எடுத்துக் காட்டியுள்ளேன்.

ஐயரவர்களின் பதிப்பு முறையில் காணப்படும் குறைபாடு கள் பற்றிக் கைலாசபதி தனது 'ஈழத்து இலக்கிய முன்னோடிகள்' எனும் நூலில் வரும் முதலாவது கட்டுரையிலே எடுத்துக் கூறியுள்ளார். கைலாசபதியின் கூற்று மிக முக்கியமானதாகும்.

**உண்மையில் இக்கட்டுரையில் ஏற்கெனவே கூறியுள்ள படி பண்டைய தமிழின் பதிப்பு முறைமையில் ஏட்டுப் பிரதிகளின் வழிவரும் சிக்கல்கள் பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றனவே தவிர அந்தப் பாடமீட்பில் காணப்பெற்ற பிரதான பிரச்சினைகள் முனைப்புறுத்தப்படவில்லை.**

மீட்கப்பட்ட நூல்களுட் பெரும்பாலானவை வெவ்வேறு காலகட்டங்களுக்குரிய தொகுதிகளாகப் பார்க்கப் பெறுவதற்கான சூழமைவிருந்தபடியால் மொழியொருமை பற்றி அதிகம் பிரச் சினைகள் ஏற்படவில்லையெனலாம். உதாரணமாக எட்டுத் தொகை நூல்களுள்ளே காணப்படும் மொழியொருமையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கொருமையையும் உதாரணமாகக் கூறலாம் (வாய்மொழிப் பாரம்பரியத் தொடர்ச்சி இதற்கு உதவியிருத்தல் வேண்டும்). ஆனால் பாடப்பொருத்தம் சம்பந்தமான சிக்கல்கள் ஏற்படலாம். சங்க இலக்கியங்களின் பதிப்பு வரலாற்றில், பாடக்கையளிப்பு முக்கியத்துவப்படுத்தப்படவில்லை. இவ்விடயத்தில் அப்பாடம் பற்றிய பிறநூல் வழக்குகள் முக்கியமானவையே. தனது ஆசிரியர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் கையாண்ட முறையைப் பின்பற்றி ஐயரவர்கள் தானும் வழக்கு மேற்கோள்களைக் காட்டுகின்றார்.

பாடக்கையளிப்பு வரன்முறை பற்றிய தெளிவின்மை தமிழ்ப் பண்டைய நூல் பதிப்பு முறை வழியாக அதிகம் தெரியப்படாதுள்ளதென்பது நமது புலமைப்பாரம்பரியத்தில் வற்புறுத்தப்படாத ஓர் அம்சமாகவே உள்ளது (ஏற்கெனவே கூறியபடி ஏட்டுக் கையளிப்பில் குறிப்பாக ஏடுகள் பிரதிபண்ணப்படும் முறைமை காரணமாக இது தெரியாமல் போயிருக்கலாம்).

ஆனால் இது சரியாகப் போற்றப்படாததனால் எழக்கூடிய இன்னொரு பாடமீட்புப் பிரச்சினை நமது பண்டைய நூற்பதிப்புப் பாரம்பரியத்திற் பேசப்படாமற் போய்விட்டதெனலாம். அது பாடவேறுபாடுகள் ஏற்படுவதற்கான காரணங்களிலும் பார்க்க பாடவேறுபாடு காணப்படும் முறைமையாகும். ஏடெழுதும் மரபில் வந்த எவ்வெவ்வியல்புகள் பாடமீட்பில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன என்பது பற்றிய நுண்ணாய்வு தமிழில் அதிகம் இல்லையென்றே கூறல்வேண்டும். உதாரணமாக ஏடுகளில் புள்ளியிட முடியாத்தன்மை, சிலகூட்டொலிகளை எழுதும் முறைமை (உ-ம்: த்த, ட்ட ஆகியன போன்றவையும் அவற்றுக்கான உயிர்மெய் விகற்பங்களும் வரி வேறுபாடு காணுதல் போன்றவற்றையும் இங்கு குறிப்பிடலாம்). ஏடு பெறுவது, ஏடுகளை ஒப்பு நோக்குவது போன்றவற்றில் காணப்பட்டு வந்த இரகசியப் பேணுகை இதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம்.

இது பற்றிக் குறிப்பிடும்பொழுது தமிழில் இலக்கியம் தவிர்ந்த மற்றைய அறிவுத் துறைகளில் அண்மைக்காலம் வரை நிலவிவந்துள்ள இரகசியத் தன்மையினை இங்கு நினைவூட்டிக் கொள்ளுதல் பொருத்தமானதாகும். குறிப்பாக வைத்தியம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்திரீகம் ஆகிய துறைகள் பற்றிய 'வாகடங்கள்' குடும்ப மட்டங்களிலே இரகசியமாகப் பேணப்பட்டு வந்த முறைமையும், பெரும்பாலும் அவற்றைப் பயன்படுத்தியவர் காலமாகும்பொழுது ஏடுகளையும் சிதையிலிடும் வழக்கமும் நிலவிய ஓர் அறிவுச் சூழலில் இலக்கியத்துறையில் இத்துணைப் பகிர்வுணர்வு காணப் பட்டதென்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இக்கட்டத்தில் குல அடிப்படையில் (சாதி) குடும்ப மட்டங்களிற் பேணப்பட்டு வந்த அறிவின் பதிகையும் அதன் கையளிப்பும் நடந்த முறையினையும் நோக்குதல் வேண்டும்.

குல அடிப்படையில் பேணப்பட்டவையாகவுள்ள அறிவுத் தொகுதிகளில் நடனம், இசையின் பாற்பட்டவை முக்கியமானவை யாகும். தொன்றுதொட்டு வழங்கிவரும் மரபின் கையளிப்பு என்பது இசை, ஆடல் என்பவற்றில் ஏடுகள் வழியாகவே பேணப் பட்டிருத்தல் வேண்டும். அத்தகைய ஏட்டுப் பாரம்பரியத்தினை உ.வே.சா. அவர்கள் சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதைக்கான தமது குறிப்புரைகளிலே தந்துள்ளார். அவை பெரும்பாலும், அடிக் குறிப்புகளாகவே சிலப்பதிகாரப் பதிப்பில் தரப்பட்டுள்ளன. நாட்டிய மரபினது தொடர்ச்சியைக் குறிப்பிடும் 'சுத்தானந்தப் பிரகாசம்' எனும் நூலினைப் பற்றி உ.வே.சா. அவர்கள் அரங்கேற்று காதையிற் குறிப்பிடுவதை நோக்குக.

உ.வே.சா.அவர்களது பதிப்பு முறைமை பற்றிய மதிப் பீட்டினைச் செய்யும்பொழுது இவற்றினை இங்கு கூறுவதற்கான பிரதான காரணம் உ.வே.சா. அவர்கள் தாம் பதிப்பித்த இலக்கிய நூல்கள் எல்லாவற்றையும் முன்கூறியவாறு ''அடிப்படையில் இலக்கியங்களாகப் பார்த்துள்ளமையேயாகும்.''

1982இல் மீள வெளியிடப்பெற்ற 'என் சரித்திரம்' இரண்டாம் பதிப்பின் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ள ஐயரவர்கள் பதிப் பித்த நூல்களின் பட்டியலைப் பார்க்கும்பொழுது தரப்பட்டுள்ள 100 நூல்களிலும் கி.பி. 600க்கு முந்தியவையாகயுள்ளவை பதினொரு நூல்களே என்பதும், கி.பி600-1200 காலப் பிரிவுக்கு உரியனவாக ஏழே உண்டு என்பதும் மிகுதி பெரும்பாலும் 13-18ஆம் நூற்றாண்டுக் காலப்பிரிவுக்குரியன எனக் கொள்ளப்படத்தக் கனவாகவுள்ளன என்பதுவும், சுவாரசியமான ஒரு தரவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலப்பகுதிக்குரியவை பெரும்பாலும் இலக்கியச்சுவை முக்கியத்துவமுடையவை என்றே கொள்ளப்படல் வேண்டும். கி.பி.600க்கு முந்திய இலக்கியங்களாக உள்ளனவற்றுள் பத்துப் பாட்டு முழுவதும் எட்டுத்தொகையினுள் நற்றிணை, அகநானூறு, கலித்தொகை தவிர்ந்த மற்றைய ஐந்தும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஐயரவர்களாலேயே பதிப்பிக்கப்பெற்றன என்பது வரலாற்று முக்கியத்துவமுடைய தரவாகும். பல்லவர், சோழர் காலத்திற்குரிய இலக்கியங்களுள் சீவகசிந்தாமணி, பெருங்கதை முதலியவை முக்கிய இடம் பெறுகின்றன.

இவ்வாறு நோக்கும்பொழுதுதான் தமிழ் நூல் மீட்டெடுப்பில் மிக முக்கிய இடத்தை வகிக்கும் சங்க இலக்கியங்கள், அவற்றைத் தொடர்ந்து வரும் இரட்டைக் காப்பியங்கள் அவற்றின் பின்னர் வரும் காப்பியங்கள் ஆகியவற்றைப் பதிப்பித்த பெருமை உ.வே.சா. அவர்களுக்கு உண்டென்பது முக்கியமான இலக்கிய வரலாற்று உண்மையாகும். இவ்வாறு நூல்கள் வெளியிடப் பட்டமை காரணமாகத் தமிழின் இலக்கியச் செழுமை உலகறியத் தெரியப்படலாயிற்று. யூலியஸ் வின்சன், ஜி.யு.போப் போன்ற பிறநாட்டறிஞர்களோடு உ.வே.சா.விற்கு ஏற்பட்ட உறவு இவ் வுண்மையையே நமக்குப் புலப்படுத்துகின்றது.

தமிழின் இலக்கியச் செழுமையையும் வளத்தையும் மீட்டெடுப்பதைத் தனது வாழ்க்கைப் பணியாகக் கொண்டிருந்த உ.வே.சா. அவர்கள் இத்துறையிலே தான் தொழிற்பட்டதற்கான சமூகக் கருத்துநிலை உந்துதல்கள் (ideological persuasions) பற்றி 'என் சரித்திர' எடுத்துரைப்பில் எதுவும் விதந்து கூறவில்லையென் பதனை அவதானிக்காமலிருக்க முடியவில்லை. அக்காலத்தில் குறிப்பாக 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சுந்தரம் பிள்ளைக்கும் கிறிஸ்தவ பாதிரியார்கள் சிலருக்கும் இடையே நடந்த தமிழ் நூல்களின் காலநீட்சி பற்றிய வாதவிவாதங்களிலே ஐயரவர்கள் பங்கு பற்றியதாகத் தெரியவில்லை. ஏற்கெனவே எடுத்துக் கூறப்பட்ட இலக்கிய வரலாற்றுணர்வின்மை (உணர்வு முனைப்பு இன்மையை) இங்கு நினைவுகூர்வது அவசியமாகிறது.

ஆயினும் ஐயரவர்கள் பதிப்பித்த நூல்கள் ஒவ்வொன்றையும் தனிநிலையாக்கங்களாக விளங்கிக்கொள்வதற்கு அவரது பதிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமை பெரிதும் உதவியது; அல்லது பதிப்பிக்கப்பட்ட நூல்களின் பாடங்கள் அல்லது பாடங்களுக்குப் பிற இலக்கிய ஆட்சிகளோடு (கையாளுகைகளோடிருந்த) ஊடாட்டங்கள் இலக்கிய ரசனைக்கு நிறைய உதவுபவையாகும்.

ஐயரவர்களுடைய வாழ்க்கையினூடாக 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் முற்பாதிக் காலத்தில் நடந்தேறிய தமிழின் நவீனமயவாக்கப்போக்கு நன்கு புலப்படு கிறது. தமிழ் நாட்டில் மரபு வழித் தமிழ்க் கல்வியில் ஏற்பட்டு வந்த மாற்றமும் அதன் முக்கியத்துவமும் ஐயரவர்களின் வாழ்க்கைப் படிகளினூடாகத் தெரிய வருகின்றன. முதலில் அவர் தமிழ்க் கல்வியை அதற்குரிய பாரம்பரியமான சூழலிலேயே மேற் கொள்கிறார். முதலிலே குடும்ப மட்டத்தில் படித்து அதன் பின்னர் அத்துறையின் முக்கிய அறிஞர்களிடத்துச் செல்கிறார். இந்த நிலைமையிலிருந்து வேறுபடும் கட்டம் குடந்தைக் கல்லூரி(1880) நியமனத்துடனேயே வருகின்றது.

காலனித்துவக் கல்வி அமைப்பினுள்ளே தமிழ் உள்வாங்கிக் கொள்ளப்பட்டுள்ளமைக்கான குறியீடாகவே இதனைக் கொள் ளல்வேண்டும். மாநிலக் கல்லூரி (1903) நியமனத்துடனேயே சென்னைக்கு வருகின்றார். அதன் பின்னர் அவர் மாநிலக் கல்லூரியில் தமிழ்த்துறையிலே பணியாற்றுகிறார். சென்னைப் பல்கலைக்கழக முதற்கட்டக் கற்பித்தல் அமைப்பினுள் கல்லூரிகள் இடம்பெறுவதும் அக்கல்லூரிகளுள் சென்னைப் பிரசிடென்சிக் கல்லூரி முதலிடம் பெறுவதும் தெரிந்த விடயங்களே. இந்தச் செல்நெறியின் நிறைவு நெறிகளாக இவர் சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வுக் குழுக்களுக்கு நியமிக்கப்படுவதையும், அவற்றுக்கு மேலாகத் திராவிட மொழிக் கல்வி நடைபெறும் மற்றைய பகுதிகளில் (கர்நாடகா, ஆந்திரா) அவ்வப்பிரதேசங்களுக்கான தேர்வுக் குழுக்களில் இடம்பெறுவதையும் குறிப்பிடல் வேண்டும்.

இவை ஒருபுறமாக, இன்னொரு புறத்தில் மேல்நாட்டு அறிஞர்களின் தொடர்பு ஏற்படுகிறது. யூலியஸ் வின்சன் என்ற பிரெஞ்சுப் பேராசிரியர், தனது பிற்காலத்தில் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொண்டிருந்த ஜி.யு.போப் ஆகியோருடன் இவருக்குக் கிடைத்த நட்பையும் இங்கே மீண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடல் வேண்டும். போப்பின் திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்பு 1900இல் ஒக்ஸ்போட் கிளாரண்டன் அச்சகத்தால் வெளியிடப்பெற்றது. தமிழ்க் கல்விக்குக் கிடைத்து வந்த இந்த உயர் பெருமையை நன்கு விளங்கிய கலாக்ஷேத்திரம், உ.வே.சா.வுக்கு வேண்டிய கணிப்பினை வழங்கிற்று.

ஐயரவர்களின் ஆடையமைப்பே காலனித்துவக் கல்வி யமைப்பில் தமிழாசிரியர்களுக்குக் கிடைத்த அந்தஸ்தின் குறி யீடாகவுள்ளது. தமிழகத்தில் அரசியற் பின்புல உந்துதல்களின்றி ஏற்பட்டு வந்த காலனித்துவ நிலைப்பட்ட நவீனமயவாக்கத்தின் குறியீடாக இதனைக் கொள்ளல் வேண்டும். காலனித்துவ நிர்வாகத்தில் இடைநிலை உத்தியோகத்தர்களுக்கிருந்த ஆடை முறையையே ஐயரவர்கள் பயன்படுத்துகிறார். பஞ்சகச்சமாகக் கட்டப்பட்ட வேட்டி, ஏறத்தாழ ஒரு மேலங்கியாகவே பயன்பட்ட 'நீண்ட கோட்', தலைப்பாகை, கோட்மீது போடப்பட்ட கரை மடிப்புச் சால்வை ஆதியன இவ் ஆடையணியாக இருந்தன. இந்த ஆடைகளை அணிந்திருந்தவர்கள் தங்கள் சமய நம்பிக்கையை வெளிப்படுத்தும் முறையில் சைவர்களுக்குரிய அடையாளங் களுடன் (திரிபுண்டரம், சந்தனப்பொட்டு) அன்றேல் வைஷ்ணவர் களுக்குரிய அடையாளங்களுடன் (நெற்றியில் திருநாம) காட்சி யளித்தனர். இந்த ஆடையணி தாசில்தார், சப்ஜட்ஜ் வரை பயன் படுத்தப்பட்டது என்பதற்கு சப்ஜட்ஜாகவிருந்த சம்பந்தம் முதலி யாரின் புகைப்படம் சான்றாகும்.

## VII

காலனித்துவ நிலைப்பட்ட இந்த நவீனமயவாக்கம் இதே காலத்தில் தமிழகத்திலே தெரியப்பட்டதிலும் பார்க்க இலங்கை யில், யாழ்ப்பாணத்திலே முனைப்புறத் தொழிற்பட்டது. ஏற்கெனவே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் அந்த ஆட்சிகளுக்கு ஆட்பட்டிருந்த யாழ்ப்பாணம் (1619-1658-1796) பிரித்தானிய ஆட்சியில் குறிப்பாக 1833இன் பின்னர் காலனித்துவத் தேவைக்கான கல்வியினை கிறிஸ்தவ மிஷனரிமார் மூலமல்லாமல் சைவ ஆங்கிலப் பாடசாலை மூலமாகப் பெறுவதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியை 1870களின் பிற்கூற்றிலிருந்து பெறமுயல்கிறது. ஆனால் முதலில் ஏறத்தாழ 1820களிலிருந்தே ஆங்கிலத் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, அமெரிக்க மிஷன் ஆதியன மூலமாக அந்த ஆங்கிலக் கல்வியைப் பெறத்தொடங்கிற்று.

இக்கல்வியூட்டல் விடயத்தில் அமெரிக்க மிஷன் மிக விரிவான முறையில் குறிப்பாகச் சுதேச அறிவு மரபுகளை கவனத் திற்கொள்ளும் வகையிலே தனது கற்பித்தல் முறைமையைக் கட்டுருவாக்கஞ் செய்தது. ஆறுமுகநாவலரது (1822-1879) இளமைக் காலத்தில் பர்சிவல் பாதிரியார் தலைமையில் மெதடிஸ்த வெஸ்லியன் சபையினால் விவிலிய மொழி பெயர்ப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டதும் பர்சிவலின் பின்னர் அமெரிக்க மிஷனின் கல்வி முயற்சிகளே முக்கியமாக இருந்தனவென்பதும் தெரிந் தவையே. அமெரிக்க மிஷன் காலனித்துவ அதிகாரமுடைய மெதடிஸ்த, அங்கிலிக்கன் திருச்சபைகள் போலல்லாது எல்லா விடயங்களிலும் ஆங்கில மேலாண்மையை நிலைநிறுத்த விரும்ப வில்லை. அது சுதேசிகளின் அறிவுமுறையின் மீள்கண்டுபிடிப்பை ஊக்குவித்தது. இதனால் இந்து வானசாஸ்திரம் பற்றிய ஆய்வு நடை பெற்றது. மேல்நாட்டு வைத்திய முறையைத் தமிழில் கற்பிப் பதற்காக ஆங்கில நூல்களைத் தமிழிலே மொழிபெயர்க்கத் தொடங்கினர் (அமெரிக்க மிஷனரிமார் வைத்தியத் துறையையும் தேவஊழியத்தில் ஒன்றாகக்கொண்டு தொழிற்பட்டனர்). இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகம் சென்று தமது கடமைகளை ஆற்றியுள்ளனர்.

தங்கள் உயர்கல்வித் தேவைக்காக வட்டுக்கோட்டைச் செமினரியை (Vatticotta Seminary 1823) நிறுவினர்.

தென்னிந்தியாவிலோ அன்றேல் தென்னிந்தியாவின் தென் கிழக்குப் பகுதியாக அமைந்த தமிழகத்திலோ பிரித்தானிய காலனித்துவம் நேரடியாகத் தனது ஆட்சிக்குட்பட்ட அடிநிலை மக்கள் மட்டத்துக்கு வந்திருந்தது என்று கூறமுடியாது. ஆனால் இலங்கையின் கடற்கரையோரப்பகுதிகளிலே குறிப்பாக யாழ்ப் பாணப் பிரதேசத்தில் இந்தக் காலனித்துவ ஆட்சி ஒவ்வொருவர் மீதும் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்திற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1796இல் நிறுவப்பட்ட பிரித்தானிய ஆட்சியானது போர்த்துக்கேய, ஒல்லாந்த காலனித்துவங்களிலும் பார்க்க ஒடுக்குமுறைத் தன்மை குறைந்ததாகக் காணப்பட்டது. பிரித்தானிய ஆட்சியின்கீழ் காலனித்துவம் வரன்முறையான பொருளாதார முறையாக நடைமுறைப்படுத்தப்படத் தொடங்கியதும் (1833) கிறிஸ்தவத்தின் செல்வாக்கு குறிப்பாக புரட்டஸ்தாந்து கிறிஸ்தவத்தின் செல்வாக்கு ஆங்கிலக் கல்வியினூடாகவே வந்தது. மெதடிஸ்த மிஷன் நிறுவனத்திற் கடமையாற்றிய நாவலர் அந்த முறைமையை எதிர்த்து ஆங்கில ஆட்சியைத் தாம் மனமுவந்து ஏற்றுக்கொள்வதாகவும் ஆனால் தமது மதத்தை (சைவத்தை)ப் பேண விரும்புவதாகவும் காட்டுகின்ற ஒரு நிலைப்பாட்டினை மேற்கொள்ளத் தொடங்கினார். ஏற்கெனவே கூறியபடி அமெரிக்க மிஷன் வட்டுக்கோட்டைச் செமினரியோ (1823) பிரக்ஞைபூர்வமாகத் தமிழர்களின் கலை, இலக்கியத் தேட்டங்களிலே புலமை நாட்டம் காட்டியது.

இதனால் தமிழின் நவீன மயவாக்கம் தமிழகத்தில் நடந்தேறியதிலும் பார்க்க மிக ஆழமாகவும் அதேவேளை மிக்க விரைவுடனும் இலங்கையில் நடைபெற்றதெனலாம். இந்த நவீனமயவாக்கத்தின் முதற்படிகளை ஆறுமுகநாவலரிடத்துக் காண்கிறோம். சாதாரண எழுத்தறிவுள்ள மக்களுக்கு விளங்கும் வகையில் நவீன காலத்திற்கு முற்பட்ட சைவ இலக்கியச் செய்யுட் பாடங்கள் சிலவற்றை உரைநடை வழிப்படுத்தியமை (பெரியபுராணம்), கிறிஸ்தவ போதக முறைமையைப் பின்பற்றி சைவ, பிரசங்க முறையைத் தொடங்கியமை, சைவக்கல்விக்கு வேண்டிய சைவ வினாவிடையை எழுதியமை என இவ்வாறு கிறிஸ்தவத்தை அடியொற்றிச் சைவவளர்ச்சிக்கு வேண்டிய நடைமுறைகளைத் தொடங்கிய ஆறுமுகநாவலர் கிறிஸ்தவ மேனாட்டு ஆட்சி வழி வந்த பல நவீனமயவாக்க நடைமுறைகளை மேற்கொள்கிறார் என்பது புலனாகின்றது.

அமெரிக்க மிஷன் மட்டத்தில் இந்த நடைமுறை 1823முதல் நிறுவனமயவாக்கப்படுவதைக் காணலாம். 1854இல் வட்டுக் கோட்டைச் செமினரியிற் கல்வி கற்ற சி.வை.தாமோதரம்பிள்ளை இந்த நவீன மயப்பாட்டின் சிறந்த பிரதிநிதியாக விளங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்சிவல் பாதிரியார் சென்னையில் நடத்திய 'தினவர்த்தமானி' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக அழைக்கப்பட்ட இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதற் பட்டதாரிகளில் ஒருவரானார் அதன் பின் வரன்முறையான அரச உத்தியோகங்களிற் பதவி வகிக்கத் தொடங்கினார்.

சி.வை.தா. ஆறுமுகநாவலரது பதிப்பு முயற்சிகளாற் கவரப்பட்டிருந்தாரென்பது அவரது எழுத்துகள் மூலம் தெரிய வருகின்றது.

சி.வை.தா.வின் பதிப்புப் பணியினை முற்றுமுழுக்கச் சைவப் பணியாகக் காணமுனைவது ஏற்புடைத்தான ஒரு நிலையாகாது.

சிறுப்பிட்டி வைரவநாதர் தாமோதரம்பிள்ளையவர்களின் கிறிஸ்தவப் பெயர் சாள்ஸ் வின்ஸ்லோ தாமோதரம்பிள்ளை ஆகும். 1844 -1847 வரை வட்டுக்கோட்டை செமினரியில் கல்வி கற்ற இவர், கல்லூரி வாழ்க்கையின் பின்னர் கோப்பாய் போதனா பாடசாலையில் ஆசிரியரானார். நீதிநெறி விளக்கம் என்ற நூலினை, ஆசிரியராகவிருந்த காலத்திலேயே பதிப்பித்துவிட்டார் என்று கூறுவர்.

வட்டுக்கோட்டை செமினரி, சுதேச சிந்தனை மரபிலும் அவற்றைக் காட்டும் நூல்களிலும் ஆர்வம் காட்டியதென்பதை அறிகின்றோம் (ஹவுலண்ட் பாதிரியாரின் இந்து வானசாஸ்திரப் பயிற்சி).

சற்று மிதமான சூழலில் ஆங்கில, மேல்நாட்டுக் கல்வியினைப் பயின்ற அமெரிக்க மிஷன் சுதேசக் கல்வியாளர்கள், தங்களுடைய புராதன வரலாறு பற்றி, குறிப்பாகத் தமிழிலக்கிய வரலாறு பற்றிக் கவனம் செலுத்துவது ஒரு முக்கிய பண்பாக வட்டுக்கோட்டை செமினரியில் வெளிப்படத் தொடங்குகின்றது. வட்டுக்கோட்டை செமினரியுடன் சம்பந்தப்பட்டிருந்த ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை 'பாவலர் சரித்திர தீபக'த்தை 1886இல் வெளிக்கொணர்ந்தார். அதில் அவர் தமிழிலக்கியம் பற்றிய வரன் முறையான வரலாற்றின் தேவையை வற்புறுத்துகின்றார். இத்தகைய ஓர் உணர்ச்சி, ஆங்கிலம் படித்த இலங்கைத் தமிழ் கிறிஸ்தவரிடையே ஏற்கெனவே நிலவிற்றென்பதற்கு உதாரணமாக அமைவது, சைமன் காசிச்செட்டியென்ற கத்தோலிக்கத் தமிழர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய The Tamil Plutarch (1857) நூலாகும் (இது பற்றிய விபரங் களுக்கு தமிழில் இலக்கிய வரலாறு என்ற நூலினைப் பார்க்கவும்).

இத்தகைய ஒரு பின்புலத்திலே, பழந்தமிழ் நூல்களை வெளிக்கொணர வேண்டும் என்ற ஒரு கடப்பாட்டுணர்வுடன் சி.வை.தா. சென்னையில் வாழ்க்கையை ஆரம்பித்தார்.

இவர் வட்டுக்கோட்டைக் கல்விக்குப் பின்னர் படிப்படியாக சைவத்தின்பாலும் ஆறுமுகநாவலரின் சேவையின்பாலும் ஈர்க்கப் படுவதை அவதானிக்கலாம். தன்னுடைய பதிப்பு முயற்சிகளிலே ஆறுமுகநாவலருடைய பதிப்பு முயற்சிகள் பற்றிக் குறிப்பிடு கின்றார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதன்முதல் பி.ஏ. பட்ட தாரிகளில் ஒருவராகவும் (1857), பின்னர் அரசசேவை உத்தியோகத் தராகவும், அதனைத் தொடர்ந்து உதவி நீதிபதியாகவும் கடமையாற் றினார். இக்காலகட்டத்திலேயே அவர் பதிப்பு முயற்சிகளில் ஈடுபட்டார். தன்னுடைய இந்த ஆர்வத்தின் ஊற்றுக்காலாக 'தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம்' அமைந்தமையைக் குறிப்பிட்டுள்ளார். இதுவே அவரது பதிப்பு முயற்சிகளுக்கான அரசியற் சமூக உந்துதல்களை எடுத்துக் காட்டுகின்றதெனலாம்.

சி.வை.தா. அவர்களின் பதிப்பு முறையினை நோக்கும் பொழுது அவரது பிரதான சிரத்தை, குறிப்பிட்ட நூலினை அதற்குரிய கால, கருத்துப் பின்புலத்திலே வைத்துக் காட்டுவதற்கு முயல்வதே ஆகும். வீரசோழியப் பதிப்புக்கான முன்னுரையில் அவர் தமிழிலக்கிய வரலாற்றுக்கான ஒரு காலகட்ட நிர்ணயத்தில் இறங்குவதைக் காணலாம். அத்துடன் குறிப்பிட்ட நூலினையும் அதற்குரிய வரலாற்றுப் பின் புலத்தில் வைத்து நோக்க முயல் வதையும் காணலாம்.

உ.வே.சா. பதிப்பு முறைமையுடன் ஒப்புநோக்கும்பொழுது, உ.வே.சா.விடத்துக் காணப்படாத இலக்கிய வரலாற்றுணர்வு இவரது குறிப்புகளிலே காணப்படுவதை அவதானிக்கலாம்.

தமது நூற்பதிப்பு முயற்சிக்கான உந்துதல், அவசியம் பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது ஏடுகள் செல்லரிப்புகளினால் பாதிப்புற்றி ருப்பதையும், மீட்கப்படாவிடின் அந்நூல்கள் அழிந்துபோய் விடுமென்ற ஆதங்கத்தையும் முன்னுரைகளிலே காணக்கூடிய தாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், இவரோ அல்லது உ.வே.சா.வோ ஒரு நூலின் பதிப்புக்கெனத் தாம் பயன்படுத்தும் ஏடுகளுள் எதனைப் பிரதான பிரதியாகக் (master copy) கொண்டனர் என்பதற்கான தடயம் எதுவுமில்லை. ஆனால், பிரதான பிரதியிலிருந்து காணப்படும் வேறுபாடுகளை பிரதிபேதங்களாக, குறிப்பாக உ.வே.சா. காட்டுவார்.

இவர்கள் இருவரும் எழுதியுள்ள முறையினை நோக்கும் பொழுது ஏட்டில் எழுத்தின் தெளிவை முதன்மைக் காரணமாகக் கொண்டார்களோ என்ற சந்தேகமே மேற்கிளம்புகின்றது. உ.வே.சா. வின் பதிப்பு முயற்சியின்பொழுது காணப்படாத தவறுகள் பற்றிய ஒப்புதல் சி.வை.தா.விடம் நிறையக் காணப்படுகிறது. ஒரு பதிப்பிற் காணப்படும் பிழைகளைத் திருத்துவதற்கு உதவினோர்க்கு நூலின் பிரதி ஒன்றினை இலவசமாக வழங்கத் தயார் என்ற அவரது முன்னுரைக் குறிப்பு இதனைக் காட்டுகின்றது. **தான் பதிப்பிக்காத நூல்களுக்கான ஏடுகளை உ.வே.சா. விடத்துக் கொடுத்தார் என்றும் கூறப்படுகிறது. இந்த விடயத்தில் இருந்திருக்க வேண்டிய பரஸ்பர நல்லுறவு உ.வே.சா.விடத்துக் காணப்படவில்லையென வையாபுரிப் பிள்ளை முதல் ஆயர் செபநேசன் வரை பலர் கூறியுள்ளனர்.** சி.வை.தா.வின் பதிப்பினை நோக்கும்பொழுது அவர் கிறிஸ்தவர் என்பதன் காரணத்தினால் கண்டனங்களை எதிர்நோக்க வேண்டியவராயிருந்ததென்பது சபாபதி நாவலருடன் நடந்த விவாதங்களினூடாகத் தெரிய வருகின்றது. தன்னுடைய பதிப்புகளுக்கெதிராக வரும் கண்டனங்களுக்கு, தன் பதிப்புகளின் முன்னுரைகளிலேயே பதிலிறுக்க முயன்றுள்ளமையையும் காணலாம்.

பழந்தமிழ் நூல்களுக்கான ஏடுகளைத் தேடும்பொழுது இவர் கிறிஸ்தவர் என்பதற்காகவே ஏடுகள் கிடைக்கவில்லையென்றும், அதற்காகவே இவர் சைவராக மாற முயன்றார் என்றும் யாழ்ப்பாண தென்னிந்தியத் திருச்சபை ஆயர் எஸ்.செபநேசன் இவர் பற்றி எழுதியுள்ள கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார் (அமெரிக்க மிஷனும் தமிழின் நவீனமயவாக்கமும் எஸ்.செபநேசன் 2007).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VIII

சி.வை.தா.வினதும் உ.வே.சா.வினதும் பதிப்புகளை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு நோக்கும்பொழுது ஏடுகள் வழிவரும் பாடக்கையளிப்பில் ஏற்படக்கூடிய தவறுகள் பற்றிய விஞ்ஞானபூர்வமான ஓர் அறிகை கிடைக்கவில்லையென்றே கூற வேண்டும். குறிப்பாக உ.வே.சா.வைப் பொறுத்தவரையிற் பிற இடங்களில் வரும் சொல்லாட்சிகளை ஆதாரமாகக் கொள்வதினால் இவ்விடர் பெருமளவிற்கு நீங்குகின்றதெனலாம். ஆனால் அது முற்றிலும் நம்பகமான வாசிப்பா என்பது சந்தேகமே. இதற்கான விடையைப் பெறுவதற்கு மணிமேகலை அல்லது சிலப்பதிகாரம் போன்ற தொடர்நிலைச் செய்யுட்களில் வரும் பிரதிபேதங்களுக்கான முற்றுமுழுதான அட்டவணை ஒன்றினைத் தயாரித்து அதனடிப்படையில் ஆராயலாம். இத்தகைய ஒரு விரிவான பாடக்கையளிப்பு ஆய்வு இன்னும் நம்மிடையே வளரவில்லை எனலாம்.

**உண்மையில் அச்சு ஊடகத்திற்கு முன்பு வந்த ஏட்டுப் பிரதிகளுக்கான பதிப்பில் ஏற்படக்கூடிய தவறுகளை விரிவாக எடுத்துக் கூறும் ஆய்வுகள் நம்மிடையேயில்லையெனலாம். ஆயினும், தமிழ் நூற் பதிப்பு வரலாற்றின் பாரம்பரியத்தை சி.வை.தா., உ.வே.சா.வுடன் மாத்திரமே நிறுத்திக்கொள்வது பொருத்தமான ஒன்றன்று.** நற்றிணை பதிப்பித்த பின்னத்தூர் நாராயணையர் (1914) போன்றவர்களுடைய பதிப்பு முறைகளையும் ஒப்பிட்டு ஆராய்தல் வேண்டும்.

தமிழ் நூற்பதிப்பு முயற்சியில் பிரித்தானிய ஆட்சி காட்டிய ஈடுபாட்டினை சி.வை.தா.வுக்கு வழங்கப்பெற்ற 'ராவ்பகதூர்' பட்டத்திலிருந்து அறிந்துகொள்ளலாம்.

சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் நவீன காலத்துக்கு முந்திய காலத்து இலக்கியங்களைப் பதிப்பிக்க மேற்கொண்ட முயற்சிகளைப் பற்றி மிக விரிவான ஆய்வு வேண்டும். இந்நூல்களில் பாடச் செம்மையைப் பார்ப்பதிலும் பார்க்க இலகுவான விளக்கத்துக்கு முதலிடம் கொடுத்துள்ளனர் என்ற உணர்வே ஏற்படுகின்றது. அத்துடன் உரைகளும் குறிப்பாக சங்க இலக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்களுக்குத் தரப்பட்ட கழகப்பதிப்பு விளக்கங்கள் தமிழின் மேன்மையை ஓர் எடுகோளாகவே கொண்டுள்ளன.

தமிழின் நவீன காலத்துக்கு முந்திய இலக்கியப் பாடப் பதிப்பில் முக்கிய இடம்பெறுவது **மார்றே ராஜம் பதிப்பு** என்று இன்று போற்றப்படும் நூற்பதிப்புகளாகும். பத்துப்பாட்டு, எட்டுத் தொகை நூல்களையும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களையும் தொல்காப்பியம் அஷ்டப் பிரபந்தம் ஆகிய நூல்களையும் அவற் றின் பாடமூலங்களை மாத்திரமே கொண்ட பதிப்புகளையும் எஸ்.ராஜம் வெளியிட்டார். பதினெண்மேற்கணக்கு, கீழ்க்கணக்கு நூல்களையும் தொல்காப்பியத்தையும் சிக்கல் நிறைந்த சொற் புணர்ச்சி தவிர்த்து பாடத்தெளிவுடன் வெளியிட்டிருந்தனர். இது ஒரு முக்கிய முயற்சியாகும். உரைகளுடன் வைத்தே பாடமூலங் களை விளங்கி வந்துள்ள நமது பாரம்பரியத்தில் இலக்கிய மாணவர்கள், ஆய்வாளர்கள் பாடமூலத்தை மாத்திரமே பயன் படுத்துவதென்பது முன்னுதாரணமில்லாத ஒரு முயற்சியாகும். உரையாசிரியர்களின் தாக்கங்களுக்கு ஆட்படாமல் பாடமூலங் களுடன் ஊடாடுதலென்பது புதிய கருத்துகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு வழிமுறையுமாகும். இந்தப் பதிப்பு முயற்சியில் முன்நின்று உழைத்தவர் வையாபுரிப்பிள்ளை ஆவார். தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரும் அ.ச.ஞானசம்பந்தனும் இவ்விட யத்தில் பெரும்பங்காற்றியுள்ளனர்.

பண்டைய தமிழிலக்கியங்களைத் தமிழரின் ஒட்டுமொத் தமான பண்பாட்டுப் பேறுகளில் ஒன்றாகக்கொண்டு அந்நூல்கள் பற்றிய பரிச்சயத்தை வளர்ப்பதற்கும் அதற்கும் மேலாக இந்தப் பண்பாட்டுப் பேற்றைச் சகல தமிழ் மக்களினதும் சொத்தாக்கும் நோக்கத்துடனும் பல பண்டைய தமிழ் நூற்பதிப்புகள் வெளி வருவது வழக்கமாகிவிட்டது.

இதற்கெனத் திருக்குறளுடன் தொடக்கப்பெற்ற மலிவுப் பதிப்பு முறையினைப் பயன்படுத்தி புலியூர்க்கேசிகன் போன்றோர் சில பதிப்புகளைக் கொண்டு வந்துள்ளனர். 1960 - 1970களில் இப்போக்கு பெரிதும் காணப்பட்டது. இப்போது 1990, 2000இல் எளிமை நிலைப்பட்ட சங்க இலக்கியப் பதிப்புகளைக் கொண்டு வரும் முயற்சி, நூல் வெளியீட்டு நிலையங்களால் மேற்கொள்ளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. இந்நூல்களில் பாடச்செம்மை பற்றிய சிரத்தையோ ஆய்வோ இல்லையென்றே கூறல் வேண்டும். உரையின் எளிமையே முக்கியமாகப் போற்றப்படுகிறது. பாட ஆய்வியலைப் பொறுத்த வரையில் இவை எத்தகைய பங்களிப்பினையும் செய்யவில்லை யென்றே கூறல் வேண்டும். இத்தண்டனைக்கு முதலில் ஆட் பட்டது திருக்குறளே.

இவ்வாறு நோக்கும்பொழுதுதான் நவீன காலத்துக்கு முந்திய தமிழ் நூற்பதிப்பு வரலாற்றில் வையாபுரிப்பிள்ளைக்குரிய இடம் (1891-1956) இன்னும் சரியாக வழங்கப்படவில்லையெனத் தெரிய வருகிறது.

தமிழ் நூற்பதிப்பு வரலாற்றினை இப் பதிப்புகள் தமிழிலக் கிய வரலாற்றைப் பார்ப்பதற்கும் மதிப்பிடுவதற்கும் எத்துணை உதவி புரிந்துள்ளன எனும் நோக்குக்கொண்டு பார்க்க முனையும் பொழுது உண்மையிற் பதிப்புகளின் பயன்பாடு இதுவேயாகும். கிளம்பும் பிரச்சினைகளை வையாபுரிப்பிள்ளை என்ற பதிப்பா சிரியர் பணியிலிருந்து நன்கு தெரிந்துகொள்ளலாம்.

சிற்றிலக்கியங்கள், இலக்கணநூல்கள், நிகண்டுகள் ஆகிய நூல்களை விடுத்து இவர் பதிப்பித்த மற்றைய நூல்களை நோக்கின் இவருடைய பதிப்பு முயற்சி ஏற்கெனவே அச்சுருவில் வெளிக்கொண்டு வரப்பட்ட இலக்கிய நூல்களைச் செம்மையான பதிப்பு முறைக்குட்படுத்துவதிலும் கால அடைவிற்குட்படுத்து வதிலுமே பிரதானமாகத் தொழிற்பட்டதெனலாம்.

இவருடைய பதிப்பு முயற்சிகள் பற்றி நல்லதொரு புலமை யறிமுகமாக அமைந்துள்ளது. பு. ஜார்ஜ் எழுதிய 'பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளையின் பதிப்புப் பணி' எனும் நூலாகும். (சென்னை 2002).

வையாபுரிப்பிள்ளை சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், இலக்கண நூல்கள், வரலாற்றுத் தொடர்புடைய சிற்றிலக்கியங்கள் ஆகியனவற்றைப் பதிப்பித்தார். இவரது சங்க இலக்கியப் பதிப்பு (1940) மிக முக்கியமானதாகும். தனித் தனிப் பதிப்புகளாக வந்தன வற்றை இவர் ஒரு தொகுதியாகப் பாட்டும் தொகையுமாகத் தந்தார். இவ்வாறு தந்ததன் மூலம் சங்க இலக்கியங்கள் இவைதான் என்ற நிரந்தரமான வரையறை ஏற்பட்டது. திருக்குறளைச் சங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியமாகக் கொள்ளாதது முக்கிய அம்சமாகும். சங்க இலக்கியப் பதிப்பில் இவர் மேற்கொண்ட இரண்டு பணிகள் முக்கியமானவை. முதலாவது சங்க நூல்களின் கால அடைவு. இரண்டாவது எஸ். ராஜத்திற்காகப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகைப் பதிப்புகளில் பாடமூலங்களை மாத்திரம், உரைவிளக்கமின்றிப் புணர்ச்சி பிரித்து பதிப்பிப்பதற்கு முன்நின்றமையாகும்.

உரையாசிரியப் பாரம்பரியத்திற்குப் பழகிப்போன நமது தமிழ்ப்புலமைப் பாரம்பரியத்தில் பாடமூலத்திற்கு மாத்திரம் செல்லும் இம்முறைமை மிக முக்கியமானதொன்றாகும். உரை விளக்க மரபிற் காணப்படும் பொருள்கோள் முறைமைக்கும் பாடமூலத்தின் வழியாக வரும் பொருள் தெளிவு முறைமைக்கும் வித்தியாசமுண்டு.

சங்க இலக்கியப் பதிப்பினை இவர் இரண்டு நிலைகளில் நின்று செய்தாரென்றே கூறவேண்டும். ஒன்று அகராதியியலாளர் என்ற வகையில் சொற்களுக்கு முதன்மை கொடுத்தார். இரண்டாவது பாடத்திற்கான கால அடைவை முக்கியப்படுத்தினார். இவ்வாறு தமது பண்டைய இலக்கியப் பணியினை அணுகிய வையாபுரிப் பிள்ளை அந்த அணுகுமுறைக்குப் பின்புலமாக இரண்டு அம்சங்களை முக்கியமாகக் கொண்டிருந்தார்.

1. உலக இலக்கிய வரலாற்று வளர்ச்சி நிலைப்பின்புலங்களை அறிந்து கொள்ளுதல் (இதன் காரணமாக அவர் இலக்கிய உதயம் பற்றிய ஆய்வில் ஈடுபட்டிருந்தார்). சாடவிக், சித்தாந்தா போன்றவர்களின் ஆய்வுகளில் ஈடுபாடு கொண்டிருந்தார்.

2. இந்தத் தமிழிலக்கியங்களை அனைத்திந்திய முக்கியத்துவமுள்ள வடமொழி இலக்கியங்களின் பின்புலத்திலும் அவற்றிற்கும் மேலாக ஒட்டுமொத்தமான வரலாற்றுப் பின்புலத்திலும் வைத்துப் பார்த்துள்ளார்.

இந்த இரண்டாவது அம்சம் அவரைப் பேராசிரியர்கள் வே.இராகவன், க.அ.நீலகண்ட சாஸ்திரி போன்றோருடைய கொள்கைகளின் வழிச்செல்பவராக்கிற்று. இச்செல்நெறி அவரது புலமை நிறைவுக்கு ஊறுசெய்வதாகக் காணப்பட்டது. சிலவேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் பல முக்கிய நூல்களின் காலங்களைப் பின்தள்ளினார். உதாரணமாக, சிலப்பதிகாரத்தை கி.பி. 8 - 9ஆம் நூற்றாண்டுக் குரியதாகக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இதனை நீலகண்ட சாஸ்திரியாராலேயே ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இவ்விடயம் இப்பொழுது நன்கு ஆராயப்பட்ட ஒரு விடய மாகவுள்ளது மாத்திரமல்லாமல் இத்துறையில் அவர் பணிபற்றிய கருத்தொருமையும் காணப்படுகிறது. (இது பற்றிய மேலதிக விளக் கத்திற்கு வையாபுரிப்பிள்ளையின் History of Tamil Language and Literature என்ற ஆங்கில நூலின் இரண்டாம் பதிப்புக்கு இக்கட்டுரை யாசிரியர் எழுதியுள்ள முன்னுரையைப் பார்க்கவும். அத்துடன் வையாபுரிப்பிள்ளையின் சிலப்பதிகார காலநிர்ணயம் பற்றிய விமர் சனத்திற்கு இந்நூலாசிரியரின் பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம் - அத்தியாயம் மூன்றைப் பார்க்கவும்).

வையாபுரிப்பிள்ளையவர்கள் தமது வாழ்க்கையின் பிற் கூற்றில் செய்த சில இலக்கியகால நிர்ணயங்கள் ஏற்றுக்கொள்ளப் பட முடியாதனவாக உள்ளனவெனினும் சங்க இலக்கியங்களின் கால அடைவு (எது முந்தியது எது பிந்தியது) பற்றித் தந்துள்ள கருத்துகள் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கனவே என்று பேராசிரியர் வ.அ.ஐ.சுப்பிரமணியம் கூறியுள்ளதை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

கம்பராமாயணத்திற்கான ஆராய்ச்சிப் பதிப்பு முயற்சியை அவர் மேற்கொண்டிருந்தார். துரதிர்ஷ்டவசமாக அவர் கை வழியாக அத்தகையதொரு ஆராய்ச்சிப் பதிப்பு வரமுடியாமற் போய் விட்டது. எனினும் 'கம்பன் காவியம்' என்ற கட்டுரைத்தொகுதி இத்துறையில் என்றென்றுமொரு கலங்கரை விளக்கமாக நிற்கும்.

தமிழ் லெக்சிக்கன் பதிப்பாசிரியர் பதிப்பிற்காக வையாபுரிப் பிள்ளைக்குப் பிரித்தானிய ஆட்சி 'ராவ்சாகேப்' என்ற பட்டத்தை வழங்கிற்று.

பதிப்பாசிரியரெனும் வகையில் சி.வை.தா., உ.வே.சா. ஆகியோர் வரிசையில் வையாபுரிப்பிள்ளையை நோக்கும் பொழுது இவர் மூலமாக நவீன காலத்திற்கு முந்திய காலகட்ட தமிழ்நூற் பதிப்பு முறையில் அறிவியல்பூர்வமாகத் தொழிற்படும் சில காரணிகளுக்கான ஒருபொதுநோக்குமுறைமை இவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புக் குறிப்புகள் மூலம் தெரியவருகின்றதெனலாம். நூல்களின் வரலாற்றுப் பின்புலம், மொழிப்பயன்பாடு போன்றவற்றை முக்கிய விதிகளாகக் கொள்ளலாம். இவ்விதிகளைக் கடைப் பிடிப்பதில் ஏற்படக்கூடிய சிரமங்களுக்கும் இவரது முடிவுகள் சிலவற்றை உதாரணம் காட்ட முடியுமெனினும் வரலாற்றுப் பின் புலத்தை மனங்கொளல்வேண்டுமென இவர் வற்புறுத்துவது மிக முக்கியமானதொன்றாகும்.

இவ்வகையில் இவரது 'காவியகாலம்' மிகவும் உன்னதமான ஒரு இலக்கிய வரலாற்றுப் படைப்பாகும். வையாபுரிப்பிள்ளை யுடன் நவீன காலத்திற்கு முற்பட்ட காலத்து நூற்பதிப்பு முதிர்வு நிலையொன்றினைப் பெறுவதாகக் கருதலாம்.

நவீன காலத்திற்கு முந்திய காலத்துத் தமிழ் நூல்களின் பதிப்புச் செம்மை பற்றிப் பேசும் இக்கட்டத்தில் சைவசித்தாந்த மகாசமாஜம் (சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகமன்று) இத்துறை யிலாற்றிய பணி தவறாது குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். பெரியபுராணம் போன்ற சைவ இலக்கியங்கள் முதலியவற்றுக்கு இவர்கள் கொண்டு வந்த பதிப்புகள் முக்கியமானவை. உதாரண மாக இவர்களது பெரிய புராணப் பதிப்பில் பாடமூலம் மாத்திரம் தரப்பட்டுள்ளதென்றாலும் இலக்கிய, தத்துவ முக்கியத்துவ முடைய பாடல்கள் தடித்த எழுத்திற் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. சமாஜப் பதிப்புகள் பெரும்பாலும் சாது அச்சுக்கூடத்திலேயே பதிப்பிக்கப்பெற்றன. இந்நிறுவனங்கள் திரு. வி.கல்யாணசுந்தர முதலியாரோடு தொடர்புடையவை. வையாபுரிப்பிள்ளையின் சங்க இலக்கியப் பதிப்பு சமாஜ வெளியீடாகவே வந்தது. தேவார அடங்கன் முறைக்கான செம்மையான பதிப்புகளில் ஒன்றாகிய மயிலை இளமுருகனார் பதிப்பு(1953) சாது அச்சுக்கூடத்திலேயே அச்சிடப்பெற்றது.

## IX

தமிழிலக்கியப் பாரம்பரியத்தில் இலக்கியப் பதிப்பு என்பது அச்சுப்பதிப்பிற்கு முந்தியகால இலக்கியங்களுக்கு மாத்திரமே உரியதென்ற கருத்தே பலரிடத்து நிலவுகின்றது. அச்சிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியான பாடங்களுக்கும் பாடப்பிரச்சினைகள் (textual problems) உண்டென்பதை மறந்துவிடக்கூடாது. உதாரணமாக அமைவன பாரதியின் பாடல்களாகும். இத்துறையில் தொ.மு.சி. இரகுநாதன், க.கைலாசபதி, பெ.சு.மணி, சீனி.விஸ்வநாதன் ஆகியோரது பங்களிப்புகள் முக்கியமானவையாகும். பாரதியின் பாடபேதங்கள் என்ற பெயரில் கைலாசபதியின் சிறு நூலொன்றுள்ளது. இத்துறையில் அது முக்கியமானதாகும்.

பாரதியின் நூற்றாண்டையொட்டி வெளியான பதிப்புக்களில் பாரதி பாடல்களின் பாடபேதப்பிரச்சினைகள் நன்கு வெளிக்கொணரப் பட்டுள்ளன.

புனைகதைத்துறையில் (சிறுகதை, நாவல்) பாடவிமர்சன வியலுக்கான சாத்தியப்பாடுகள் நிறைய உள்ளன. அவை பற்றி நாம் இன்னும் சிந்திக்கவே தொடங்கவில்லை. இறுதியாக ஒரு குறிப்பு அத்தியாவசியமாகிறது. ஆங்கில இலக்கியம், கிரேக்க இலக்கியம், விவிலியம் போன்றனவற்றின் ஆராய்ச்சிகளில் ஆக்கங்களின் பாட மூலங்களை ஆராயும் 'textual criticism' என்பது முக்கியமான ஆய்வுத் துறையாகும்.

இத்துறை பல்கலைக்கழகக் கற்கைநெறியாகத் தமிழ்ச் சூழலில் வளர்க்கப்படவில்லையென்பது உண்மையே. பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டப்படிப்புக் காலத்தில் அங்கு நடைபெற்ற மூன்று வருடங்களுக்கொருமுறையான 'textual criticism' பற்றிய கற்கைநெறியிற் கலந்துகொண்ட கைலாசபதி தமது மேற் படிப்பின் பின்னர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இதனை யொரு பாடமாக்கினார் (1968, 1969). பின்னர் இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைச் சிறப்புக் கற்கைநெறி மாணவர் களுக்குப் பாடமாக்கப்பெற்றது (1975,1976).

பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொண்ட இந்நூலாசிரியர் பர்மிங்காமில் தானிருந்த காலத்தில் இக்கற்கை நெறியைப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அந்த அநுபவத்தின் அடிப்படையில் அப்பாடத்தை கொழும்பிலும், பின்னர் யாழ்ப்பாணத்திலும் கற்பித்துள்ளார்.

இத்துறையில் கைலாசபதியின் மாணவராக முன்வந்தவர் களுள் முக்கியமானவர் பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவர். இப்பொழுது பேராசிரியர் சிவலிங்கராசா நவீன காலத்துக்கு முந்திய ஈழத்துத் தமிழிலக்கியங்களின் பாடவிமர்சனவியயில் ஆர்வம் காட்டுகின்றார். இலங்கைப் பல்கலைக்கழங்களின் தமிழ்ச் சிறப்பு மாணவரின் பரம்புரையில் தெரியப்பட்ட ஒரு துறையாகவே இப்பாடம் காணப்படுகிறது. ஆயினும் நாம் ஆழமான ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை. தமிழகத்தில் இத்துறை பற்றிய முக்கிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இராமகிருட்டினன் பாட பேதம் பற்றி முக்கிய நூலொன்றினை எழுதினார். திருக்குறள் பற்றி மணக்குடவர், பரிமேலழகருக்குள்ள வேறுபாடுகளை குறள் அறிஞர்கள் பலர் எடுத்துப் பேசியுள்ளனர்.

இக்கற்கை நெறியினை கைலாசபதி 'மூலபாடத்திறனாய்வு' என்ற பெயரிலேயே நடத்தி வந்தார். இத்தொடர் பற்றி நண்பர் கைலாசபதிக்கும் எனக்குமிடையில் கருத்து வேறுபாடிருந்தது. மூல பாடமென்பது 'original text' இனைக் குறிக்கும். அதனால் ஒரு பாடம் பற்றிய முதல் வடிவமே மூலபாடம் எனும் நிலையைப் பெறலாம். ஆனால் ஒரு text வழங்கும் நிலையில் சாதாரணமான அதன் பாடமாகக் கொள்ளப்படுவது எல்லா வேளைகளிலும் முதலில் அல்லது முதற்தடவையில் எழுதப்பட்டவையாக இருப்ப தில்லை. ஆசிரியரே முதலில் தான் கொண்டிருந்த பாடத்தை பின்னர் மாற்றலாம். இதுபற்றி நானும் நண்பர் கைலாசபதியும் மிக விரிவாக உரையாடியுள்ளோம். Text ஐத் தமிழ் மரபில் 'பாடம்' என்றே கொள்வர். (இது lesson க்குமான சொல்லாக உள்ளது. உண்மையில் text ஊடாக வருவதே lesson ஆகும்).

தமிழ் மரபை நோக்கும்பொழுது 'பாடம்' என்ற வழக்கே பெரிதும் உள்ளதை அறிவோம். எனவே text என்பதற்கு 'பாடம்' என்று கொண்டு textual criticism ஐ பாடவிமர்சனம் / பாட விமர்சனவியல் எனக் கொள்ளலாம்.

இக்கட்டுரைக்கான சிற்றாய்வினை மேற்கொண்டபொழுது பாடமூலம் எனும் தொடர் பற்றியும் சிந்திக்க வேண்டியதாயிற்று. 'பாடமூலம்' என்பது பாடத்தின் மூலமாகும். மூலபாடமென்பதும் பாடமூலமென்பதும் ஒரே பொருள் தரா.

அமைப்பியல்வாதத்தில் வரும் text எனும் பதத்தைப் பலர் பிரதியென மொழி பெயர்ப்பர். அது தவறு. பிரதியென்பது copy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். Text என்றுமே copy அல்ல. அமைப்பியல்வாதச் சொல்லாடலிலும் text என்பதற்குப் பாடம் எனக்கொள்வதே பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

ஒட்டுமொத்தமாகச் சிந்திக்கும்பொழுது உ.வே.சா., சி.வை.தா. முதல் பலரை நாம் textual editors ஆகக் கொண்டாலும் text என்பதற்கு தெளிவும் அதேயளவு கனதியுமுள்ள ஒரு தமிழ்ப் பதம் இன்று வரை பயன்படுத்தப்படவில்லை என்பது இத்துறை யில் நுண்ணிதான, ஆழமான சிந்திப்பு நடைபெறவில்லையென் பதை நன்கு காட்டுகிறது எனலாம்.

பாடம் எனும் சொல்லின் பொருத்தப்பாட்டினைப் புறந்தள்ளி விடமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை

*ஈழத்து இலக்கிய முன்னோடிகள்,* க.கைலாசபதி, குமரன் புத்தக இல்லம், சென்னை, 2001.

*என் சரித்திரம்,* உ.வே.சா., புதிய பதிப்பு, சென்னை, 1982.

*சிலப்பதிகார மூலமும் அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும்,* உ.வே. சா. பதிப்பு, சென்னை, 1950.

*தாமோதரம்,* சி.வை.தா.வின் பதிப்புரைகளின் தொகுப்பு, யாழ்ப்பாணம், 1971.

*தமிழ்ச்சுடர்மணிகள்,* எஸ். வையாபுரிப்பிள்ளை, சென்னை, 1952.

*தமிழில் இலக்கிய வரலாறு,* கா. சிவத்தம்பி, என்.சி.பி.எச்., சென்னை, திருத்திய பதிப்பு.

*புறநானூறு மூலமும் உரையும்,* உ.வே.சா. பதிப்பு, சென்னை,1950.

*புறத்திரட்டு,* இரா. இளங்குமரன் பதிப்பு, 1962.

*மணிமேகலை,* உ.வே.சா. பதிப்பு , சென்னை, 1949.

*வையாபுரிப்பிள்ளையின் பதிப்புப் பணி,* பு. ஜார்ஜ், சென்னை, 2002.

*Classified Catalogue of Tamil Printed* Books, John Murdoch , Madras (1865), Reprint 1993.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்நூற் பதிப்பு பணியில் உ.வே.சா.: பாடவிமர்சனவியல் நோக்கு

**பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி**

தமிழ்நூற் பதிப்பு வரலாற்றில் முக்கிய இடம்பெறுபவரான உ.வே.சாமிநாதையவர்களை மையப்படுத்தி அவரது பணிகளையும், அவர் காலத்திலேயே முக்கிய இடம்பெற்றிருந்த சி.வை. தாமோதரம்பிள்ளை பற்றியும் இவர்களுக்கு முன்னோடியாக விளங்கிய ஆறுமுகநாவலரின் பதிப்புப் பணி பற்றியும் இச்சிறு நூல் எடுத்துரைக்க முயல்கின்றது. அத்துடன் தமிழ்நூற்பதிப்புப் பணியினை இவர்களோடு மாத்திரம் நிறுத்திவிடாமல் இவர்களுக்குப் பின் தமிழ் நூற் பதிப்புப் பணியிற் பேரிடம் பெற வேண்டிய பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் பதிப்புப் பணிகளையும் இது குறிப்பிட்டுச் செல்கிறது. **"Testual Criticism"** எனும் பதத்துக்கான தமிழ் மொழிபெயர்ப்பு 'பாடவிமர்சனவியல்' என்பதே என நிறுவி அத்துறையின் வரையறைகளுக்குள் நின்று கொண்டு மேற்கூறிய அறிஞர்கள் பற்றிய ஓர் சிற்றாய்வினை இந்நூல் மேற்கொள்கின்றது.



**கார்த்திகேசு சிவத்தம்பி** *(1932)*, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி *(1978 - 1996)*, தற்போது அதே பல்கலைக்கழத்தில் தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியராகவுள்ளவர். தனது இள, முதுமாணிப் பட்டங்களை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப்பட்ட ஆய்வை இங்கிலாந்திலுள்ள பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொண்டவர். இலக்கியத் திறனாய்வு, இலக்கிய வரலாறு, சமூக வரலாறு, நாடகமும் அரங்கியலும், தொடர்பியல் எனப் பல்வேறு துறைகளில் ஈடுபாடுடைய இவர் கொழும்பு, களனி பல்கலைக்கழகங்களில் வருகை விரிவுரையாளராகவும், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் வருகைப் பேராசிரியராகவும் *(1998/99)*, பேர்கிளியிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகம் *(1980)*, கேம்பிரிச் பல்கலைக்கழகத்தின் தென் ஆசிய மையம் *(1983/84)*, ஹாவார்ட் பல்கலைக்கழகம், புதுடில்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் வரலாற்றுக் கற்கை மையம் *(1982)*, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் *(1982)* ஆகியவற்றிற்கு முதுநிலை ஆய்வாளராகச் சென்றவர். சென்னைப் பல்கலைக்கழகத்திலும் *(1988)*, அனைத்துலக தமிழாராய்ச்சி நிலையத்திலும், சுவீடனிலுள்ள உப்சலா பல்கலைக்கழகத்திலும் *(1992)* வருகைப் பேராசிரியராக பணியாற்றியவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும், நாற்பதிற்கு மேற்பட்ட நூல்களையும், சிற்றாய்வேடுகளையும் எழுதி வெளியிட்டவர்.

ISBN 978-955-659-104-4

9 789556 591040

இந்திய விலை ரூ 45.00

குமரன் புத்தக இல்லம்

*விடயம் : தமிழ் இலக்கியம்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org